www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 இதழ் 14 | 2025 ஜூலை 06 - ஜூலை 12 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# பொது வேலைநிறுத்தம் வெல்லட்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு தீர்மானம்






**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய நிர்வாகக் குழு கூட்டம் ஜூலை 1ம் தேதியும், தேசியக் குழு கூட்டம் ஜூலை 2,3 தேதிகளிலும், தில்லியில் அஜாய் பவனில் நடைபெற்றன.**

அதில் கட்சியின் தேசிய செயலாளர் அமர்ஜித் கௌர் முன்மொழிந்த பின்வரும் தீர்மானத்தை, கூட்டம் ஒரு மனதாக நிறைவேற்றியது.

ஜூலை 9, 2025 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்துக்கு மத்திய தொழிற்சங்கங்களும், தொழில் வாரி கூட்டமைப்புகளும் விடுத்துள்ள அழைப்புக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுக் கூட்டம் முழுமையான ஆதரவை வழங்குகிறது.

இந்த வேலைநிறுத்த அழைப்பு



அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, விவசாயி விரோத மற்றும் தேச விரோத, கார்ப்பரேட் சார்பு கொள்கைகளுக்கு எதிரானது.

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொது சேவைகளை தனியார்மயமாக்குதல், அவுட்சோர்சிங், ஒப்பந்ததாரர்மயமாக்கல் மற்றும் தொழிலாளர்களை தற்காலிகமாக்குதல் போன்ற கொள்கைகளுக்கு எதிராகவும், தொழிலாளர் விரோத, முதலாளிகளுக்கு சாதகமான நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராகவும், தொழிற்சங்க இயக்கத்தை நசுக்கி முடக்குவதற்கு, வேலை நேரங்களை அதிகரித்தல், கூட்டு பேரம் பேசும் உரிமையைப் பறித்தல், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைப் பறித்தல், தொழிலாளர் சட்டங்களை முதலாளிகள் மீறுவது குற்றமல்ல

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# காவல் துறையால் கொல்லப்பட்ட அஜித்குமார் கடைசி மனிதனாக இருக்கட்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் நபர்களை அடித்துக் கொல்லப்படும் கொடூரம் அவ்வப்போது நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக 25 பேர் காவல் விசாரணையில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகில் உள்ள மடப்புரத்தில் கோயில் காவலாளி அஜித்குமாரை (வயது 27) விசாரணைக்கு அழைத்துச் சென்று, அடித்து சித்திரவதை செய்ததில் கொல்லப்பட்டுள்ளார். நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில் தொடர்புடைய காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். துணைக் கண்காணிப்பாளர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மாவட்ட கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். அரசின் இந்த நடவடிக்கை பொதுமக்களிடம் ஏற்பட்டு வரும் கொந்தளிப்பை தணிக்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் அழைத்துச்



செல்லப்பட்ட கோயில் காவலாளி மீது முதல் தகவல் அறிக்கை கூட பதிவு செய்யாமல், காவல் நிலையத்துக்கு கொண்டு செல்லாமல், வெளியிடங்களில் வைத்து கொடுமையான தாக்குதல் நடத்த யார் உத்தரவிட்டது? எந்த ஆதாரத்தின் அவசியம் கருதி தனிப்படைக் காவலர்கள் அனுப்பப்பட்டனர். வாய்வழி வந்த புகாருக்குத் தொடர்ச்சியாக, இடைவிடாத அழுத்தம் கொடுத்த சக்தி எது? என்பது போன்ற தொடர் வினாக்களுக்கு அரசு பொறுப்பான பதில் அளிக்க வேண்டும்.

மகனை இழந்து தவிக்கும் தாயிடம் முதலமைச்சர் அலைபேசியில் தொடர்பு கொண்டு ஆற்றுப்படுத்தியதும், காவலர்களின் தாக்குதலில் உயிர் தப்பிய அவரது இளைய மகனுக்கு அரசுப் பணியும், அவர்கள் வசிப்பதற்கு வீடும் வழங்கிய நடவடிக்கை ஆறுதல் அளிக்கிறது. அரசின் மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறைக்கு நல்ல முன்னுதாரணமாகும்.

அதே சமயம், சாதாரண வழக்குகளில் கைது செய்யப்பட்டு, புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்ட 300க்கும் மேற்பட்ட விசாரணை குற்றவாளிகள் கைகளும், கால்களும் எலும்பு முறிந்த நிலையில் சென்றனர் என்பதை எளிதில் கடந்து செல்ல முடியாது. இது, காவல் துறையின் இதயம் இறுகிப் போய், மனிதாபிமானத்தை இழந்து நிற்கும் அவலத்தை வெளிப்படுத்துகிறது.

காவல் துறையின் விசாரணை முறையை, மனித உரிமைகளை மீறாத வகையில் முற்றிலும் மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதனை உணர்ந்து, மக்கள் நலன், பொதுப் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குப் பராமரிப்பை மையமாகக் கொண்டு காவல் துறையின் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## மேகவெடிப்பால் மிதக்கும் இமாச்சல்

இமாச்சலப் பிரதேச மாநிலத்தில், ஜூன் கடைசி வாரம் மேகவெடிப்பு ஏற்பட்டு அதீத கனமழை கொட்டியது. இதனால் பியாஸ் நதியில் கரைபுரண்டோடிய வெள்ளத்தில், தரம்சாலா நீர்மின் திட்டப் பணியில் ஈடுபட்டிருந்த 20 தொழிலாளர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து மழை, வெள்ளத்தில் சிக்கி 34 பேர் உயிரிழந்தனர். மாநிலத்தில் 60 விழுக்காடு பகுதிகள் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டு இருளில் மூழ்கியது. 129 சாலைகள் மூடப்பட்டன. இதேபோன்று அடுத்தடுத்து மேகவெடிப்பு ஏற்பட்டு அதீத கனமழை பெய்தது. இதில் மண்டி மாவட்டம் வெள்ளத்தில் மிதக்கிறது. சையாஞ்சு, கர்சோக் பகுதிகள் உருக்குலைந்து விட்டன. பல்லாயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். குறுகிய காலத்தில் அதீத கனமழை பெய்வதை மேகவெடிப்பு என்பர். இமாச்சலில் 10 நாட்களில் அடுத்தடுத்து நிகழ்ந்த மேகவெடிப்பால் மாநிலமே வெள்ளத்தில் மிதக்கிறது.

## மதுரை ஆதீனத்துக்கு சம்மன்

சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னைக் கொல்ல சதி நடப்பதாகவும், உளுந்தூர்ப்பேட்டை அருகே தன்னுடைய கார் மீது மோதிய காரில் இருந்த இருவரும் தொப்பி, தாடி வைத்திருந்தனர், முஸ்லீம்கள் என்றும் குற்றம்சாட்டினார். ஆனால், அவர் சொல்வது பொய் என்பது போக்குவரத்து காவல்துறை வெளியிட்ட சிசிடிவி காட்சிகள் மூலம் அம்பலமானது. இதனையடுத்து மத மோதலைத் தூண்ட முயற்சிப்பதாக வழக்குரைஞர் ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், மதுரை ஆதீனம் மீது சென்னை கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசார் 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். ஜூன் 30 ஆம் தேதி விசாரணைக்கு முன்னிலையாகுமாறு சம்மன் அனுப்பினர். ஆனால் அவர் தலைமறைவானார். இதனையடுத்து மீண்டும் ஜூலை 5 ஆம் தேதி ஆஜராகுமாறு மதுரை ஆதீனத்துக்கு மீண்டும் சம்மன் அனுப்பினர்.

## தெலங்கானா ரசாயன ஆலையில் விபத்து - 42 பேர் பலி

தெலங்கானா மாநிலம் மடக் மாவட்டத்தில் உள்ள மருந்து தயாரிக்கும் ரசாயன தொழிற் சாலையில், ஜூன் 30ல் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் பணியிலிருந்த 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 50க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 30 தொழிலாளர்கள் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 42 ஆக அதிகரித்தது. ரசாயன ஆலையை நடத்திவரும் சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திடம், வெடிவிபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க பேச்சு நடத்திக் கொண்டிருப்பதாக தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

கட்சிக் கடிதம்

# செந்நதிகள் சங்கமிக்கும் சேலம் செங்கடல்



மாநில மாநாட்டை நோக்கி... 3

போர்க்குணமிக்க தோழர்களே!

**ஆகஸ்ட் திங்கள் என்றாலே, நம் போராட்டங்களும் தியாகங்களும் நினைவிற்கு வரும்!**

இருநூறு ஆண்டுகால வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேறு என்று கம்பீரமாக முழக்கமிட்ட நாள் ஆகஸ்ட் 9. அந்நாளில்தான் கடந்த 2022ல் திருப்பூர் மாநகரம் செம்மயமானது.

அடிமைச் சங்கிலி அறுத்தெறியப்பட்டு ஆனந்த சுதந்திரம் அடைந்த நாள்தான் ஆகஸ்ட் 15.

நாட்டில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றிய போதும், அச்சட்டங்கள் ஓட்டைகள் நிறைந்தது, சட்டங்கள் இருக்கின்றன, இருந்தென்ன பயன்? நிலப்பிரபுக்களும், ஜமீன்தார்களும் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்கள் வசமே வைத்துள்ளனர் என்பதனை நாட்டு மக்களிடம் அம்பலப்படுத்திய மகத்தான போராட்டமான நில மீட்சிப் போராட்டம் கண்ட நாள் 1970 ஆகஸ்ட் 15.

இன்று அதே ஆகஸ்ட் 15 அன்றுதான் சுதந்திரம் பெற்ற நன்னாளில் சேலம் மாநகரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 26 ஆம் மாநாடு தொடங்குகின்றது.

மங்கள இசையோடு மட்டுமல்ல சுதந்திரத்தைப் பாதுகாப்போம், சோசலிசம் அங்கமைப்போம் என்ற கம்பீர முழக்கத்துடன் தேசியக்கொடி ஏற்றப்பட உள்ளது. உலகம் முழுமையும் உள்ள மக்கள், கருத்தாலும் கரத்தாலும் உழைக்கக்கூடிய மக்கள் அனைவரின் ஏகோபித்தக் கொடி என ஒன்று இருக்குமெனில் அது செங்கொடி மட்டும்தான்.

அத்தகைய செங்கொடி வானுயர்ந்து பறக்கும். நம்மோடு பயணித்த, பல்வேறு சாதனைகள் புரிந்த நம் அருமைத் தோழன் எம்.செல்வராசு எம்.பியின் பெயரால் அமைந்துள்ள நகரில் சேலம் சிறைத் தியாகிகள் அரங்கில் மாநாடு கூடுகின்றது.

மாவட்ட மாநாடுகள் அனைத்தும் நடைபெற்று, அம்மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப் பெற்ற தியாகத் தழும்பேறிய பிரதிநிதி தோழர்கள் சங்கமிக்க உள்ளார்கள்.

நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் மாநாடு தமிழ்நாட்டின் அரசியல் குறித்து ஆய்ந்தறிந்து அரசியல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

சேலம் மாநகரம் செங்கொடிகளால் மட்டுமே சிவந்து நிற்கவில்லை. கொட்டிய செங்குருதியாலும் சிவந்து நிற்கும் நகரமாகும். சேலத்திற்கு என்று பல்வேறு சிறப்புகள் உண்டு. காவிரிப் பாசன மாவட்டங்கள் முழுவதும் நம்பி இருப்பது மேட்டூர் அணையைத்தான்.

இயற்கை இடர்பாடின்றி ஒத்துழைத்தால் மேட்டூர் அணையின் கொள்ளளவான 120 அடியை எட்டி நிரம்பி வழிந்தால், விவசாயிகள் மகிழ்ச்சிக் கடலில் மனமகிழ்ந்து தங்களின் வேளாண் பணிகளை உற்சாகப் பெருக்கோடு தொடங்குவார்கள்.

பல்வேறு மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குவதும் காவிரி நதிநீரே, சேலம் இரும்பாலை, ஏற்காடு மலையெனப் பல்வேறு சிறப்புகள் சேலம் மாவட்டத்திற்கு உண்டு. முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்திற்குச் சிறப்பு சேர்த்ததும் சேலமே!

பல்வேறு சிறப்புகளையுடைய சேலம் நகரில் மற்றொன்றும் அமைந்துள்ளது. அதனை சிறப்பு என்று கூறுவதா? நாட்டின் அவமானச் சின்னமென அழைப்பதா? அதுதான் சேலம் மத்திய சிறைச்சாலை. அறைக்கு 6 பேர் விதம் அடைத்து இரவு சிறுநீர் கழிப்பதற்கு இரு சிறு மண் கலயங்களை வழங்கும் சிறைச்சாலை அது.

1948–50 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதும் உள்ள மத்திய சிறைச்சாலைகளில் கம்யூனிஸ்ட்கள் ஆயிரக்கணக்கில் அடைக்கப்பட்டார்கள். அன்றைய சிறைச்சாலை கொடூரங்கள், கொடுமைகள் நிறைந்து இருந்தன என்பதனை இன்றைய இளம் தலைமுறை அறிய வாய்ப்பில்லை.

கம்யூனிஸ்ட் தலைவர்களின் வாழ்க்கைச் சுருக்கம் அடங்கிய ‘காலம் தோறும் கம்யூனிஸ்ட்கள்’ எனும் இரு பாகங்கள் நூல்களாக வெளிவர உள்ளன.

மாநாட்டுப் பணிகளுக்கிடையே அம்மகத்தான நூல் வெளியீட்டு விழா வரும் ஜூலை 28 ஆம் நாள் மாலை சென்னை காமராசர் அரங்கில் வெளியிடப்பட உள்ளது. நூலினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்.






அந்நூல்களை தோழர்கள் அனைவரும் வாங்கிப் படித்தால், சிறைச்சாலைக் கொடுமைகள் எத்தகையது என்பதனை உணர முடியும். அத்தகைய கொடிய அடக்குமுறைக் கொடுமைகள் சேலம் மத்திய சிறைச்சாலையிலும் 1950 பிப்ரவரி 11ஆம் நாள் அரங்கேறியது.

சமூக மாற்றம் ஏற்பட வேண்டும், சுரண்டலும், சமூகக் கொடுமைகளும் முற்றாக ஒழிக்கப்பட்டு, பொதுவுடமைச் சமுதாயம் காண வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் போராடினார்கள்.

என்னைக் காட்டிலும், என்னுடைய குடும்பத்தைக் காட்டிலும், மனைவி மக்களைக் காட்டிலும் உற்றாரைக் காட்டிலும், உறவுகளைக் காட்டிலும், மேலானது என் தாய் நாடு, மேலானது என் தாய் நாட்டு மக்கள் என வீர சபதமெடுத்துப் போராடியவர்கள் கம்யூனிஸ்டுகள்.

அத்தகைய போற்றுதலுக்குரிய தியாக சீலர்களைத்தான் சிறைச்சாலைகளில் அடைத்து சித்திரவதை செய்தனர். அரசு, அதிகார வர்க்கம், நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள், பெரு முதலாளிகள் என அமைந்த கூட்டணிதான் கொடிய அடக்குமுறைகளை கம்யூனிஸ்டுகள் மீது ஏவியது.

சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகள், சமூக விரோதிகள் அல்ல, பிறர் சொத்தை அபகரித்தவர்கள் அல்ல, மாறாக மக்களுக்காகப் போராடிய வீர மறவர்கள். அவர்களை அரசியல் கைதிகளாகச் சட்டப்படி நடத்திட வேண்டும். அவ்வாறு நடத்தப்படுவதற்கு மாறாக அங்கே உள்ள பிற குற்றவாளிக் கைதிகளைப் போன்று கம்யூனிஸ்டுகளையும் அடக்கி ஆள்வதற்கு முயன்றார்கள்.

350 க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகள் சிறையில் இருந்தனர். மதம் இல்லை, ஜாதி இல்லை, மொழி வேறுபாடுகள் இல்லை. நாட்டிற்காக, மக்களுக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு போராடிய அவர்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும் என்பதே போராட்டமாகும்.

ஆனால் கொடிய அடக்குமுறைகளை மேற்கொண்ட சிறை நிர்வாகம், கம்யூனிஸ்டுகளை, அரசியல் கைதிகள் என்று கருதாமல் அனைவர் மீதும் தொடர்ந்து அடக்குமுறைகளை மேற்கொண்டது.

கொலைக் குற்றவாளிகளும், சாராயம் காய்ச்சுபவர்களும், கொள்ளையடித்தவர்களும், திருடர்களும், சமூக விரோதிகளும் சிறைச்சாலை சட்டப்படி குரங்குக் குல்லாய் அணிய வேண்டும்.

அத்தகைய குல்லாவை கம்யூனிஸ்டுகளும் அணிய வேண்டும் என நிர்பந்தம் செய்தார்கள். நாங்கள் அரசியல் கைதிகள், குல்லாவை அணிய மாட்டோம் என மறுத்தார்கள்.

இவை குற்றமா? கொடுங்கோலர்கள் குற்றமெனக் கருதினார்கள். குல்லாவை அணிந்தே தீர வேண்டும் என்று நிர்பந்தம் செய்தார்கள். அவர்களின் நிர்பந்தங்களுக்கு கம்யூனிஸ்டுகள் அடிபணியவில்லை. சமரசமாகவில்லை.

ஜாலியன் வாலாபாக்கில் சுட்டுத் தள்ளியது போன்று, சேலம் சிறையில் கம்யூனிஸ்டுகள் மீது கொடூரமான முறையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

22 தோழர்கள் துப்பாக்கித் தோட்டாக்களுக்குப் பலியானார்கள். 107க்கும் மேற்பட்ட தோழர்கள் குண்டுகள் துளைத்துப் படுகாயமுற்றார்கள். அத்தகைய மகத்தான தியாகிகளை நினைவுகூர்ந்துதான் சேலம் சிறைத் தியாகிகள் அரங்கம் என நமது மாநாட்டு அரங்கத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தோழர்களே! நமது நாட்டில் நடைபெறும், நடைபெற்று வரும் சம்பவங்களை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். குல்லாவை வைக்க மாட்டோம் எனக் கூறியதற்கு சேலம் சிறையில் 22 பேர் கொல்லப்பட்டார்கள். கால்படி கூலி உயர்வு வேண்டும் என்பதற்காகக் கீழே வெண்மணியில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 44 பேர் எரித்துக் கொல்லப்பட்டார்கள்.

இவைதான் நமது நாடு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று கூறுவார்கள். சேலம் சிறைக் கொடுமை, வெண்மணிக் கொடுமை என்பது மட்டுமல்ல எத்தனையோ கொடுமைகளையும் அடக்குமுறைகளையும் நாம் சந்தித்துள்ளோம். இவைகளைக் கண்டு நாம் அஞ்சியும் இல்லை. அஞ்சப்போவதும் இல்லை.

நூறாண்டு காலம் கோழையாக வாழ்வதைவிட ஒரு நாள் வீரனாக வாழ்வதே மேலானது. எதனையும் எதிர்கொள்ளும் ஆற்றலும் அஞ்சாமையும் நமக்கு உண்டு. சாகத் துணிந்தவர்கள் மட்டுமல்ல சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள்.

நாம் அரசியல் கட்சியில் அங்கம் வகிப்பது அற்பத்தனமான காரியங்களுக்காக அல்ல,

‘புதியதோர் உலகம் செய்வோம்
கெட்டபோரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்’

என பாரதிதாசன் முழங்கிய பொதுவுடமைச் சமுதாயம் காண நம்மை நாம் அர்ப்பணித்துப் பயணத்தைத் தொடர்கின்றோம்!

தொய்வின்றித் தொடர்வோம்! அதன் தொடர்ச்சிதான் மாநாடுகள். நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ளவும், நம் பலத்தை வெளிப்படுத்தவும், நடைபெறவுள்ள மாநாடு, பேரணி, பொதுக்கூட்டம் என அனைத்திலும் சங்கமிப்போம்.

தமிழகத்தின் அனைத்து கிராமங்கள், நகரங்கள் எனப் புலப்படும் செந்நதிகள் ஆகஸ்ட் 18 இல் சேலத்தில் சங்கமித்து செங்கடலாகட்டும்.

நம் மாநாடும், அரசியல் தீர்மானங்களும், அணிவகுப்பும் புதிய வரலாற்றைப் படைக்கட்டும்.

தமிழக வரலாற்றில் சேலம் மாநாடு மறக்க முடியாத மாபெரும் வரலாறாக அமையட்டும்.

ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் சேலம் செங்கடலாக மாறட்டும். சோவியத் செஞ்சேனை பாசிசத்தை வீழ்த்தி உலகின் ஜனநாயகத்தை மீட்டெடுத்தது.

தமிழகத்தின் செஞ்சேனை ஆர்.எஸ்.எஸ் பாஜக பாசிசத்தை வீழ்த்தும் பெரும் படையாக வரலாறு படைக்கட்டும்!

வாரீர் சேலம் மாநகர் நோக்கி!
மீண்டும் சந்திப்போம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம்

# தேர்தல் வெற்றிக்கான சதியா? தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிப்பா?



வ.மணிமாறன்

**தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பல்வேறு ஐயங்களையும் குற்றச்சாட்டுகளையும் எழுப்பியுள்ளது. தேர்தல் வெற்றிக்கான சதியா? அல்லது கொல்லைப்புறத்தில் நடைமுறைக்கு வரும் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) தயாரிப்பா? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.**

பீகார் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வரும் அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது. அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை (Special Intensive Revision) மேற்கொள்ளுமாறு ஜூன் 22 ஆம் தேதி தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதுதொடர்பான விளக்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. அதில்,

"வாக்காளர் பட்டியல் என்பது மாறக் கூடிய பட்டியல். இறப்புகள், இடப்பெயர்வு, 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களைச் சேர்ப்பது போன்ற காரணங்களால் வாக்காளர் பட்டியல் மாறிக் கொண்டே இருக்கும். எனவே வாக்காளர் பட்டியலை திருத்துவது அவசியம். அரசியலமைப்பு சட்டப் பிரிவு 326 வாக்காளருக்கான தகுதிகளைக் குறிப்பிடுகிறது. அதன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் அந்தத் தொகுதியில் வசிக்கும் இந்திய குடிமக்கள் மட்டுமே வாக்காளர்களாக பதிவு செய்யத் தகுதி உடையவர்கள்.

தற்போது தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் 4.96 கோடி வாக்காளர்களின் விவரங்களை கொண்ட 2003 ஆம் ஆண்டுக்கான பீகார் வாக்காளர் பட்டியல் பதிவேற்றப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் தங்கள் கணக்கெடுப்பு படிவங்களை சமர்ப்பிக்கும் போது, இதையே ஆவணச் சான்றாக பயன்படுத்தலாம். இந்த பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப்பணிகளை எளிதாக்கும். மொத்த வாக்காளர்களில் ஏறத்தாழ 60 விழுக்காட்டினர் இந்தப் பட்டியலைத் தவிர வேறெந்த ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை" என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இதேபோன்று மகாராஷ்டிரா மாநிலத்தில் மக்களவைத் தேர்தலுக்கும், சட்டப்பேரவைத் தேர்தலுக்கும் இடையே ஏறத்தாழ 41 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர்.




இதனால்தான் "மக்களவை தேர்தலில் வென்ற இந்தியா கூட்டணி, சட்டப்பேரவைத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது" என்று காங்கிரஸ் குற்றம்சாட்டியது.

"வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் என்பது, எங்களுடைய புகார்களுக்கான தீர்வு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் வஞ்சகமான, சந்தேகத்திற்குரிய திட்டமாகும். ஒவ்வொரு வீட்டுக்கும் நேரில் சென்று ஆவணங்களைச் சரிபார்க்கும் அரசு அதிகாரிகள், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட வாக்காளர்களைப் பட்டியலிலிருந்து நீக்கும் அபாயம் உள்ளது. பீகார் தேர்தல் தேதி அறிவிப்பதற்கு சில வாரங்களுக்கு முன் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகளை மேற்கொள்வது சந்தேகத்திற்குரியது. தற்போதைய வாக்காளர் பட்டியலை முற்றாக நிராகரித்து, புதிய பட்டியலை உருவாக்கும் தந்திரம்" என்றும் காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

பீகார் தேர்தலைப் போன்றே அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், "இந்த மாநிலங்களிலும் வெற்றி பெற தேர்தல் ஆணையத்தின் துணையுடன் பாஜக சதி செய்வதாக" குற்றம்சாட்டின.

ஆனால் தேர்தல் ஆணையமோ, "விரைவான நகர் மயமாதல், அடிக்கடி இடப்பெயர்வு, இளம் குடிமக்கள் வாக்களிக்கத் தகுதி பெறுதல், இறப்புகளை தெரிவிக்காமல் இருப்பது, சட்ட விரோத குடியேறிகளின் பெயர்களைச் சேர்த்தது போன்ற காரணங்களால் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தேவைப்படுகிறது. பிழைகள் இல்லாத வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கும் இது அவசியமாகும். இந்தப் பணிகளின் போது வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் (BLO) வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பார்கள்" என்றும் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கு முன்பு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், இடமாறுதல் போன்ற திருத்தங்களை மேற்கொள்வது வழக்கம்தான் என்றாலும், தற்போது சிறப்பு தீவிர திருத்தம் எதிர்ப்புக்கு உள்ளாவது ஏன்?

சிறப்புத் தீவிர திருத்தம் (Special Intensive Revision) குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளவை வருமாறு:

"பீகார் மாநிலத்தில் ஒவ்வொரு வாக்காளரின் தகுதியையும் சரிபார்க்க வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (Special Intensive Revision) நடைபெற்று வருகிறது.

பீகாரில் உள்ள 243 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தற்போதுள்ள 7 கோடியே 89 லட்சத்து 69 ஆயிரத்து 844 வாக்காளர்களுக்கும் புதிய கணக்கெடுப்புப் படிவங்கள் அச்சிடப்பட்டு, வீடுவீடாக விநியோகிக்கப்படும். இணையதளம் மூலமும் புதிய கணக்கெடுப்புப் படிவங்களை நிரப்பலாம்.

தற்போதுள்ள 7,89,69,844 வாக்காளர்களில், 01.01.2023 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள 4.96 கோடி வாக்காளர்களும் கணக்கெடுப்புப் படிவத்தை நிரப்பி சமர்ப்பிக்க வேண்டும்" என்று தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அதாவது,

1. **வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் கணக்கெடுப்புப் படிவத்தை நிரப்பிக் கொடுக்க வேண்டும்.**
2. **01.01.2003 அன்று வெளியான வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பவர்கள், அதனையே சான்று ஆவணமாகக் கொடுத்து படிவத்தை நிரப்ப வேண்டும்.**
3. **01.01.2003 அன்று வெளியான வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தேர்தல் ஆணையம் பரிந்துரைத்துள்ள தகுதிக்கான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.**
4. **2004 க்குப் பிறகு பிறந்தவர்கள் பிறப்புச் சான்றிதழுடன், குடியுரிமைக்கான ஆதாரமாக பெற்றோரின் ஆவணங்களை வழங்க வேண்டும்.**

தேர்தல் ஆணையத்தின் இந்த நிபந்தனைகள்தான் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, 2004க்கு பிறகு பிறந்தவர்களுக்கு பிறப்புச் சான்றிதழுடன், குடியுரிமைக்கான சான்றாக பெற்றோரின் ஆவணங்களைக் கொடுக்க வேண்டும் என்பது வாக்காளர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடியது. மேலும் இது வாக்காளர் பட்டியல் திருத்தமா? அல்லது தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens - NRC) தயாரிப்பா? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

"சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம், தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) கொல்லைப்புறம் வழியாக கொண்டு வருவதற்கான மோசமான நடவடிக்கை" என்று திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் டெரிக் ஓ பிரையன் குற்றம்சாட்டியுள்ளார். "பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இதுபோன்ற செயல்களை பாஜக செய்து வருகிறது. இதனை இந்தியா கூட்டணி கட்சிகள் ஒரே குரலில் எதிர்க்க வேண்டும்" என்றும் டெரிக் ஓ பிரையன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது வாக்காளர் பட்டியல் தொடர்பானது மட்டுமல்ல. ஜனநாயக அமைப்பு நீடிப்பது பற்றியது. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரும் உரத்துக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

**தொடர்புக்கு: 9500001224**

## தேர்தல் முறைகேட்டுக்கான வரைபடம்

2024 மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஜனநாயகத்தில் மோசடி செய்வதற்கான ஒரு வரைபடமாக இருக்கின்றது. இது எப்படி நடந்தது என்பதை எனது கட்டுரை படிப்படியாகக் காட்டுகிறது:

1. தேர்தல் ஆணையரை நியமிப்பதற்கான குழுவில் மோசடி
2. வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல்
3. வாக்காளர் வாக்குப்பதிவை உயர்த்துதல்
4. பாஜக வெற்றிபெற வேண்டிய இடத்தில் போலி வாக்குகளை குறிவைத்தல்
5. ஆதாரங்களை அழித்தல்

மகாராஷ்டிராவில் பாஜக ஏன் இவ்வளவு தீவிரமாக இருந்தது என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. ஆனால் மோசடி என்பது மேட்ச் பிக்சிங் போன்றது, ஏமாற்றுபவர்கள் விளையாட்டில் வெற்றி பெறலாம், ஆனால் நிறுவனங்களை சேதப்படுத்துதல் என்பதன் முடிவில் பொதுமக்களின் நம்பிக்கையை அழிக்கும்.

மகாராஷ்டிராவின் மேட்ச் பிக்சிங் அடுத்து பீகாரிலும், பின்னர் பாஜக தோற்கும் இடங்களிலும் நடக்கும். மேட்ச் பிக்சிங் தேர்தல்கள் எந்தவொரு ஜனநாயகத்திற்கும் நஞ்சாகும்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எழுதிய கட்டுரையில் இருந்து..

## மகாராஷ்டிரா தேர்தல் மீதான புகார்கள்

- மகாராஷ்டிராவில் 2019 சட்டப்பேரவைத் தேர்தலின் போது 8.98 கோடி வாக்காளர்கள். 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது 9.29 கோடி வாக்காளர்கள்.
- 2024 நவம்பரில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின் போது 9.70 கோடி வாக்காளர்களாக அதிகரித்தது.
- அதாவது, 5 ஆண்டுகளில் 31 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் 5 மாதங்களில் 41 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- மகாராஷ்டிராவில் 18 வயதுக்கு மேற்பட்ட 9.54 கோடிப் பேரை விட பதிவு செய்துள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 9.70 கோடி.
- சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற அன்று மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு 58.22% இருந்தது. மறுநாள் காலையில் இறுதி வாக்குப்பதிவு என அறிவிக்கப்பட்டது 66.05%
- 7.83 விழுக்காடு திடீரென அதிகரித்தது 76 லட்சம் வாக்காளர்களுக்குச் சமம் என்று ராகுல் காந்தி குற்றச்சாட்டு
- பாஜக கூட்டணி வெற்றி பெற்ற 85 தொகுதிகளில் உள்ள 12 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் மட்டும் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் ராகுல் காந்தி புகார்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 14

## மிகுந்த பொறுப்போடு முதலமைச்சர்

திருப்புவனத்தில் காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் மரணம் தமிழ்நாட்டை உலுக்கி இருக்கிறது.

ஒரு காவல் நிலையத்தில் புகார் தந்து அதைப் பெற வைப்பதற்கும், சிஎஸ்ஆர் எனப்படும் ரசீதை வாங்குவதற்கும், முதல் தகவல் அறிக்கை எழுத வைப்பதற்கும் சாதாரண மக்கள் படும் பாடு சொல்லி மாளாது.

ஆனால் எழுத்து மூலமான எந்தப் புகாரும் இன்றி, எஃப்.ஐ.ஆர் எதுவும் போடாமல், 27 வயது இளைஞனை அடித்தே கொன்றிருக்கிறார்கள்.

அதுவும் டி.எஸ்.பி.யின் பொறுப்பில் உள்ள தனிப்படை.

ஒரு நாள் நைய அடித்து, அந்தத் தங்கநகையை திருடி இருக்க வாய்ப்பு இல்லை என்று விட்டுவிட்ட பின்பு, மீண்டும் 'நன்றாக விசாரிக்கச் சொல்லி' உயர் அதிகாரியிடம் இருந்து ஆணை வந்ததால், உயிர் போகும் வரை மிருகத்தனமாக அடித்துத் துவைத்து இருக்கிறார்கள்.

ஆணையிட்டவர் யார்? அவ்வளவு அக்கறை செலுத்துவதற்கு என்ன காரணம்? என்பது பற்றி இன்னும் எதுவும் தெரியவில்லை.

படுகொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் உயிருக்கு ஈடாக வேறு எதையும் கொடுத்து விட முடியாது என்றாலும், இதுவரை இல்லாத சில நல்ல விஷயங்களும் நடந்திருக்கின்றன.

இப்போது ஐந்து காவலர்கள் சிறையில் இருக்கிறார்கள். டி.எஸ்.பி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எஸ்.பி பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டு காத்திருப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

முதலமைச்சர், கொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் தாயார் மற்றும் சகோதரியிடம் தொலைபேசி மூலம் பேசி, நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்க உறுதியும் தந்திருக்கிறார். இதுவரை எந்த முதல்வரும் இப்படி செய்ததில்லை.

சென்ற வருடம் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்ட கார்த்திக் ராஜாவும், கணேஷ் குமாரும் நிகழ்விடத்தில் உடனிருந்தது மட்டுமில்லாமல், புகார் அளித்து இதனை வெளியில் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

இந்தக் கொடூர சித்திரவதையை, மறைந்திருந்து பார்த்து, வீடியோ எடுத்ததோடு, நேரடியாக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் சொன்ன கோவில் ஊழியர் பெருமதிப்பிற்கு உரியவராகிறார்.

வழக்கம்போல, உடற்கூராய்வு அறிக்கையை தராமல் அரசு மருத்துவமனை இழுத்தடித்து இருக்கிறது. நீதிமன்றம் தலையிட்டதால் அது கிடைத்திருக்கிறது.

என்றாலும் ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டும், இரண்டு இளம் வழக்கறிஞர்களும் கூடவே இருந்ததால், உடலில் 44 காயங்கள் இருந்ததையும், அடித்ததனால் தான் உயிர் பிரிந்து இருக்கிறது என்பதையும் உடற்கூராய்வில் பதிவு செய்திருப்பதாக தெரிகிறது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியன், மரியா கிளாட் ஆகியோர், வழக்கறிஞர்களின் வாதத்தை பொறுமையாகக் கேட்டதோடு அல்லாமல், சாட்சியையும் இதமாக கேள்வி கேட்டு, நீதிமன்றம் நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கலாம் என்பதை உறுதி செய்து இருக்கிறார்கள்.

தூத்துக்குடியில் 13 பேரைச் சுட்டுக் கொன்ற பிறகு, அதை தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று பொறுப்பற்றுப்பேசிய, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, இப்போது ஏதேதோ அறிவுரை கூறுகிறார் !

எங்களிடம் மறைப்பதற்கு ஏதுமில்லை என்று காட்டுவதற்காகவோ என்னவோ, இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், தூத்துக்குடி ஸ்டெர்லைட், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்குகளை சிபிஐ கையாண்ட விதம் அதன் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதாக இல்லை.

காவல்துறை சீர்திருத்தத்துக்காக, கோபால்சாமி கமிஷன் (1969-71) சபாநாயகம் கமிஷன் (1989-90) பூரணலிங்கம் கமிஷன் (2006-08) நீதிபதி சி.டி.செல்வம் கமிஷன் (2022-25) என நான்கு ஆணையங்கள் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டன.

அனைத்து ஆணையங்களுமே 'காவல் மரணங்கள்' குறித்து ஆய்வு செய்து, விரிவான அறிக்கைகளைக் கொடுத்திருக்கின்றன.

அவை பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்பட்டவற்றையும் ஆணவம் மிக்க காவல்துறை பயனில்லாமல் போகச் செய்து விட்டது. காவல் நிலையத்துக்குள் சிசிடிவி கேமரா வைக்கப்பட வேண்டும் என்பது பூர்ணலிங்கம் கமிஷன் பரிந்துரைதான். கேமரா வைக்கப்பட்டது; ஆனால் அவை எதுவும் இயங்காது ! அல்லது கேமரா பார்வையில் படாத இடத்தில் வைத்து அனைத்து குற்ற செயல்களும் நடத்தப்படுகின்றன.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், காவல்துறை எப்படி இருந்ததோ, அதிலிருந்து இன்றுவரை மாறவே இல்லை. எது செய்தாலும் தப்பிவிடலாம் என்ற அதிகார ஆணவத்துக்குள் உறைந்து கிடக்கிறது.

மிகுந்த பொறுப்போடு இந்த நிகழ்வைக் கையாண்ட முதலமைச்சர், காவல்துறை சீர்திருத்தத்திற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிராக சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.



## பொது வேலை நிறுத்தம் வெல்லட்டும்!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்றும், அதே நேரத்தில் தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளை குற்றமாக்குதல் போன்றவற்றை எதிர்த்தும் தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன.

வேலையின்மை, காலிப் பணியிடங்களில் பணி நியமனம், அதிக வேலைகளை உருவாக்குதல், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் நாட்களையும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தையும் அதிகரித்தல், நகர்ப்புறங்களுக்கும் இந்தச் சட்டத்தை விரிவுபடுத்துதல் ஆகிய தொழிலாளர் நலன் கருதிய கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் முன் வைத்துள்ளன.

தொழிற்சங்கங்களோடு இணைந்து, ஒருங்கிணைந்த விவசாயிகள் முன்னணி (எஸ்கேஎம்), விவசாய தொழிலாளர் சங்கங்களின் தேசம் தழுவிய கூட்டமைப்பு ஆகியவையும் வேலை நிறுத்தத்தில் இறங்குகின்றன.

இந்தியாவின் கிராமங்களிலும் பெருமளவில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களை அணிதிரட்ட அவை முடிவு செய்துள்ளன.

தொழிற்சங்கங்கள், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவை தெரிவிக்கிறது.,

மேலும் ஜூலை 9 ஆம் தேதி நடைபெறும் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தின் வெற்றிக்கான நடவடிக்கைகளில் பங்கேற்க கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறது.

ஜூலை ஒன்றாம் தேதி கூடிய தேசிய நிர்வாக குழு, வருகிற செப்டம்பர் 21 முதல் 25ஆம் தேதி வரை பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் நடைபெறுகிற 25 வது கட்சி பேராயத்தில் வைக்கப்பட வேண்டிய வரைவு அரசியல் தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்த தீர்மானத்தை தேசியக்குழு கூட்டத்தில் அறிமுகப்படுத்தி பொதுச்செயலாளர் டி ராஜா உரையாற்றினார். கூட்டத்துக்கு தேசிய செயற்குழு உறுப்பினர் ராமகிருஷ்ண பாண்டா தலைமை வகித்தார்.

இந்த வரைவு அறிக்கையின் மீது தேசிய குழு உறுப்பினர்கள் பல திருத்தங்களை முன்மொழிந்தார்கள். இவற்றை இணைத்து விரைவில் வரைவு அரசியல் தீர்மானம் பொதுவெளியில் வெளியிடப்படும்.

அந்தத் தீர்மானத்தின் மீது கட்சி உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்கள் அல்லாதவர்களும் கூட திருத்தங்கள், சேர்த்தல்கள், நீக்கல்கள் ஆகியவற்றை முன்மொழியலாம். இந்தியாவின் பெரும்பான்மை மொழிகளில் இந்த தீர்மானம் வெளியிடப்படும் என்பதால், அவற்றைப் படித்து அவரவர்கள் மொழியிலேயே தேவையான திருத்தங்களை எழுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனுக்கு அனுப்பி வைக்கலாம்.

அவை ஒவ்வொன்றையும் சண்டிகரில் நடைபெறும் கட்சிப் பேராயத்தில் படித்து, அவற்றை ஏற்பது குறித்து முடிவு செய்யப்படும். மாநாட்டு முடிவில் அனைவரின் பங்களிப்புடன் தயாரிக்கப்படும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, வெளியிடப்படும்.

அந்தத் தீர்மானம் தான், அடுத்த கட்சிப் பேராயம் வரை கட்சியை நடத்திச் செல்வதற்கான அரசியல் வழிகாட்டியாக அமையும்.

சண்டிகரில் நடக்க இருக்கும் கட்சி பேராயத்திற்கான ஆயத்தப் பணிகள் குறித்து, பஞ்சாப் மாநில செயலாளர் பந்த்சிங் பிரார் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

சென்ற கட்சி பேராயம் தேர்வு செய்த, தேசிய குழுவின் கடைசிக் கூட்டம் என்பதால் இது முக்கியத்துவம் பெறுகிறது. அரசியல் தீர்மானத்தோடு சேர்த்து, அமைப்புநிலைத் தீர்மானமும், மூன்றாண்டு கால வேலை அறிக்கையும் கட்சிப்பேராயத்தில் வைக்கப்படும். இவற்றின் மீது பேராயப் பிரதிநிதிகள் ஐந்து நாள் விவாதித்து முடிவுகளை மேற்கொள்வார்கள்.

## தனியார் பள்ளி நிர்வாகம் பெற்றோர்களிடம் கட்டாய வசூல் செய்யும் அவலம்

### ஏழை மாணவர்களின் கல்வி பாதிப்பை கண்டு கொள்வார்களா அதிகாரிகள்!

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டப்படி சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கான நிதியை அரசு வழங்கவில்லை எனத் தனியார் பள்ளி நிர்வாகம் பெற்றோர்களிடம் கட்டாய வசூல் செய்யும் அவலம் நிலவுகிறது.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (RTE) மூலம் தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு எண்ணிக்கையில் 4-14 வயதுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஏழை மாணவர்கள் சேர்க்கை பெற்று சிறந்த கல்வி அறிவை பெற்று பயன்பெறும் வகையில் அரசு கடந்த 2009ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு இட ஒதுக்கீட்டின் மூலம் சேர்க்கப்படும் மாணவர்களுக்கான கட்டணத்தை அரசு நேரடியாக பள்ளிகளுக்கு செலுத்தி விட வேண்டும். இந்த நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்ட தனியார் பள்ளிகளுக்கு மேற்படி திட்டத்தின் மூலம் அரசின் நிதி சென்றடையாமல் கிடப்பிலும் நிலுவையிலும் இருந்து வருவதால் தனியார் பள்ளி நிர்வாகம் நடைமுறை செயல்பாடுகளில் நிதி பற்றாக்குறை ஏற்பட்டு பாதிப்பதாக தெரிவிக்கின்றனர். இந்த காரணத்தை தெரிவிக்கவும் பள்ளி நிர்வாகம் தினக்கூலி வேலை செய்து வறுமையில் வாழும் பெற்றோர்களிடம் இலவச கட்டாய கல்வி கட்டணத் தொகையை செலுத்த வேண்டும் என கட்டாயப்படுத்தி வருகின்றனர். மேலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களான நோட்டுப் புத்தகங்களும் வழங்காமல் பிஞ்சு குழந்தைகளின் மனதில் வகுப்பறையில் பாரபட்சமும் பேதகத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர். இந்தக் கல்வியாண்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகள் இலவச கட்டாய கல்வி பயில மாணவர்கள் சேர்க்கை செய்ய முடியாது என்று எதிர்ப்பையும் தெரிவிக்கின்றனர். இதனால் ஆசை காட்டிய அரசின் திட்டம் நிதி குளறுபடியால் பாதிக்கப்படும் பெற்றோர்களும் தான் கல்லாத கல்வியை தனது குழந்தைகளுக்கு எப்படியாயினும் கிடைக்க செய்ய வேண்டும் என்ற அவாவோடு கஷ்டத்தில் சேகரித்த நகைகளை அடமானம் வைத்தோ, வட்டிக்கு பணம் வாங்கியோ, வாசலில் வந்து நிற்கும் மைக்ரோ பைனான்சில் லோன் பெற்றாவது தனியார் பள்ளிகளில் சேர்க்க முற்படுகின்றனர்.

கட்டாய இலவச கல்வி உரிமைச் சட்டப்படி தொடர்ந்து மாணவர்கள் கல்வி பயில்வதற்கு தடையில்லாமல் தனியார் பள்ளிகளுக்கு நிதியை தருவதற்கு அரசு மிக முக்கியத்துவம் கருதி தனியார் பள்ளி மாணவர் சேர்க்கையை உறுதி செய்து செயல்படுத்திட அரசும் மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பெற்றோர்களும் சமுக ஆர்வலர்களும் எதிர்பார்க்கின்றனர்.

–கபில்தேவ்

# அம்பேத்கர் பெயரால் அரசமைப்பை தீர்க்கும் பாஜக!



த.லெனின்

**வாழு, வாழ விடு! என்பதுதான் மதச்சார்பின்மை. பொருளாதார, சமூகச் சுரண்டலில் இருந்து மக்களைத் திசை திருப்பவே இந்துத்துவப் பிளவுவாத அரசியலை சங்கிகள் எப்போதும் கையில் எடுக்கின்றனர். எனவே இதற்கு இடையூறாக இருக்கும், அம்பேத்கர் உருவாக்கிய அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றனர்.**

அந்தவகையில் சமீபத்தில் துணைக் குடியரசுத் தலைவர் ஜக்தீப் தன்கர் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள மதச்சார்பின்மை மற்றும் சமத்துவக் கருத்துகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் அடிப்படை ஆன்மாவாகவும், விதையாகவும் முகவுரை இருக்கிறது. ஆனால், பாரதத்துக்கான அரசியலமைப்பு முகவுரையை, 42வது சட்டத்திருத்தத்தின் மூலம், 1976ம் ஆண்டு, நெருக்கடி நிலையின் போது திருத்தப்பட்டு, சமத்துவம், மதச்சார்பின்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவை சேர்க்கப்பட்டன. இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் தங்கள் அரசியலமைப்பின் முகவுரையை மாற்றவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்த மாற்றம் சனாதன தர்மத்தின் அடிப்படை உணர்வுக்கு எதிராக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## விவாதமாக்கும் இந்துத்துவம்

துணைக் குடியரசுத் தலைவரின் இந்தக் கருத்துகள், ஆர்.எஸ்.எஸ். பொதுச்செயலாளர் தத்தாத்ரேயா ஹோசபலே, இந்திய அரசியலமைப்பு முகவுரையில் உள்ள 'சமத்துவம்' மற்றும் 'மதச்சார்பின்மை' ஆகிய வார்த்தைகள் நீக்கப்பட வேண்டுமா? என்பது குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று கூறிய இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்துள்ளன. அத்துடன், மத்திய அமைச்சர்கள் சிவராஜ் சிங் சவுகான் மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோர் ஹோசபலேயின் கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். வாரணாசியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய சவுகான், இந்தியக் கலாசாரத்தின் மையக்கரு 'சர்வ தர்ம சம்பவ்' (அனைத்து மதங்களுக்கும் சமமான மரியாதை) என்றும், மதச்சார்பின்மை அல்ல என்றும் கூறினார்.

அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, பிரதமர் மோடி காலனித்துவ ஆட்சியின் மரபை அழிக்கப் பாடுபடுவது போல, அவசர நிலையின் இரண்டு முக்கிய விளைவுகள் மதச்சார்பின்மை மற்றும் சோசலிசம் என்ற வார்த்தைகளை நமது அரசியலமைப்பில் சேர்த்தது எதிரானது என்று நான் நம்புகிறேன் என்று கூறியுள்ளார்.


ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங், முகவுரையிலிருந்து புதிதாகச் சேர்க்கப்பட்ட வார்த்தைகளை நீக்கும் கோரிக்கையை பா.ஜ.க ஆதரிக்கிறதா? என்று கேட்கப்பட்ட போது. சரியாகச் சிந்திக்கும் ஒவ்வொரு குடிமகனும் இதை ஆதரிப்பர் என்றார் அவர். ஏனெனில், இந்த வார்த்தைகள் டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய அசல் ஆவணத்தில் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும்'' என்றும் பதிலளித்துள்ளார். இதன்மூலம், இந்த விவாதம் ஆளும், பாசிச, பாஜக தரப்பில் வலுப்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.


## அம்பேத்கரைத் திரிக்கும் தன்கர்!

ஜக்தீப் தன்கர், அரசியலமைப்புச் சிற்பி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் முக்கியமான ஒரு மேற்கோளை வாசித்துக் காட்டியுள்ளார், "இந்த எண்ணமே எனக்குள் கவலையை ஏற்படுத்துகிறது. சாதிகள் மற்றும் மதங்கள் போன்ற நமது பழைய எதிரிகளுடன் கூடுதலாக, பல்வேறு எதிர் அரசியல் கொள்கைகளைக் கொண்ட, அரசியல் கட்சிகள், எதிர்காலத்தில், உருவாகப் போகின்றன. இதை உணரும்போது இந்தக் கவலை மேலும் அதிகரிக்கிறது. இந்தியர்கள் தங்கள் நாட்டை தங்கள் கொள்கையை விட உயர்த்திப் பிடிப்பார்களா? அல்லது தங்கள் கொள்கையை நாட்டை விட உயர்த்திப் பிடிப்பார்களா? எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி, கட்சிகள் தங்கள் கொள்கையை நாட்டை விட உயர்த்திப் பிடித்தால், நமது சுதந்திரம் இரண்டாவது முறையாக ஆபத்தில் சிக்கும், ஒருவேளை நிரந்தரமாக இழக்கப்படலாம்.

இதிலிருந்து நாம் அனைவரும் தொடர்ந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமது சுதந்திரத்தை நமது கடைசி ரத்தத் துளி உள்ளவரைப் பாதுகாக்க நாம் உறுதியாக இருக்க வேண்டும். என்ற அம்பேத்கரின் இந்த மேற்கோளை வாசிப்பதன் மூலம், முகவுரையில் செய்யப்பட்ட மாற்றங்கள் நாட்டின் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் என்று துணைக் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்,

உண்மையில் முழுக்க, முழுக்க பாஜக, ஆர்.எஸ். எஸ்.சின் இந்துத்துவ, கலவர அரசியலுக்குத்தான் இது பொருந்தும். அவர்களே நாட்டை விட தனது அரசியல் உயர்ந்தது என்று பிடிவாதம் பிடிக்கின்றனர். அப்படி இருக்க சாத்தான் வேதம் ஓதுவது போல் இவர் பேசுவதா?




## அம்பேத்கர் கூறுவதைச் செவிமடுங்கள்!

அண்ணல் அம்பேத்கர், "மதத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் அல்லது ஒவ்வொரு சடங்குகளையும் மதிக்க முடியாது. அதாவது மதத்தை மதிக்க வேண்டும். ஆனால் அது விமர்சனத்துடன் இருக்க வேண்டும். அத்துடன், அரசும் மதமும் ஒன்றாக இருக்கக்கூடாது. மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும்போது, மதம் பாகுபாடுகளுக்குக் காரணமாக மாறும்போது, அரசு அதில் தலையிட வேண்டும். இரண்டாவதாக, அரசு தன்னை மதத்தில் இருந்து முற்றிலும் விடுவித்துக் கொள்ளாமல், அனைத்து மதங்களில் இருந்தும் கொள்கை ரீதியான தூரத்தைப் பேண வேண்டும்'' எனக் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், "உதாரணமாக, தீண்டாமையைச் சகித்துக்கொள்ள முடியாது. தனிப்பட்ட மதச் சட்டத்தை அப்படியே இருக்க அனுமதிக்க முடியாது. மதத்தில் எப்போது தலையிட வேண்டும், எப்போது தூரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும். அரசமைப்பு உறுதிப்பாட்டின்படி சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு இடையே மதம் குறுக்கே வர அனுமதிக்கக் கூடாது,'' எனக் குறிப்பிட்டுள்ளார். இப்படி குறுக்கே வரும் இவர்கள் பற்றி திரு ஜக்தீப் தன்கர் என்ன கூறுவார்? எனவே அம்பேத்கர் மதச்சார்பின்மைக்கு ஆதரவாகத்தான் இருந்தாரே ஒழிய ஒருபோதும் எதிராக இல்லை.

## மதச்சார்பின்மையின் வரலாறு!

எந்தக் காரணமும் இல்லாமல் ஒருவரின் சொந்த (மத)பிரிவை மதிக்கவோ, மற்றவர்களைக் கண்டிக்கவோ கூடாது என்றும், அனைவரும் தத்தமது பிரிவினைக் கடைப்பிடிக்க உரிமை உண்டு என்று கி.மு மூன்றாம் நூற்றாண்டு அசோகரின் ஆணை மதச்சார்பின்மை குறித்து குறிப்பிடுகிறது.

13 ஆம் நூற்றாண்டில் அனைவருக்கும், ஒவ்வொரு மதத்திற்கும், மதச் சுதந்திரத்தை வெளிப்படையாக உத்தரவாதம் செய்யும் சட்டத்தை இயற்றிய முதல் ஆட்சியாளர்களில் ஒருவராக இருந்தவர் வீரன் செங்கிஸ் கான்.

மொகலாய பேரரசர் அக்பர் முதலில் இஸ்லாத்திற்கும் இந்தியாவின் பிற மதங்களுக்கும் இடையிலான சமத்துவத்தை அறிவித்தார், இஸ்லாத்திற்கு கட்டாய மதமாற்றங்களைத் தடை செய்தார், மத அடிப்படையிலான பாகுபாட்டை ஒழித்தார், மேலும் இந்துக் கோயில்கள் கட்டுவதையும் ஆதரித்து சமயப் பொறமைக்கு எடுத்துக்காட்டாக இருந்தார்.

## மதங்களிடையே சமத்துவம்!

மேற்கத்திய மதச்சார்பின்மை நடைமுறையிலிருந்து குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்ட இந்தியாவின் மதச்சார்பின்மை, இந்தியாவில் ஒரு சர்ச்சைக்குரிய ஒன்றாக இந்துத்துவாதிகள் கூறுகின்றனர். இந்திய மதச்சார்பின்மையை "போலி மதச்சார்பின்மை என்று அவர்கள் அடாவடித்தனமாகப் பேசி வருகின்றனர். அப்படியெனில் உண்மையான மதச் சார்பற்றவர்கள் அவர்கள் என்றால் மதக் கலவரங்களை நடத்தியதும், கோவில்களையும் இடித்ததும் யார்? இது எந்தவகையான சகிப்புத்தன்மை?

இந்திய மதச்சார்பின்மைக் கருத்தை ஆதரிப்பவர்கள் காந்தி முதல் நேரு, பகத்சிங், இடதுசாரிகள் வரை, அது சிறுபான்மையினர் மற்றும் பன்மைத்துவத்தை மதிக்கிறது என்று கூறுகின்றனர். அத்துடன் பலமொழி, பல சாதி பிரிவுகள் இருக்கும் நாட்டில் அனைவருக்கும் பொதுவான ஒரு சமத்துவ ஏற்பாடாகத்தான் சமயச் சார்பின்மை, சமத்துவம் என்ற சொல் அமைந்திருக்கிறது.

## அரசமைப்பின் உள்ளார்ந்த பொருள் மதச்சார்பின்மை!

அரசமைப்புச் சட்ட நிர்ணயக் குழு மதச்சார்பின்மைக் கொள்கையை ஏற்கவில்லை, அதை இந்திரா காந்திதான் திணித்தார் என்று இவர்கள் வாதாடுகிறார்கள். அரசியல் சட்டத்தின் அடித்தளமே மதச்சார்பின்மைதான். சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் மதப் பாகுபாடு கூடாது; ஜாதிப் பாகுபாடு கூடாது; இனப் பாகுபாடு கூடாது என்று தெளிவாகக் கூறுகிறது.

இந்தப் பிரிவுகள் நீடிக்கும் வரை இது மதச்சார்பற்ற நாடுதான்; பொது வெளிகளில் பாகுபாடு கூடாது (பிரிவு 10) தனி மனித மதச் சுதந்திர உரிமை உண்டு (பிரிவு 25) அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் (29(2) வாக்காளர் பட்டியலில் மதப்பாகுபாடுகள் கூடாது (பிரிவு 32). இவை அனைத்தும் அரசியல் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள், ஏதோ, மதச்சார்பின்மை என்ற வார்த்தை இணைக்கப்பட்டதால் மட்டுமே மதச்சார்பற்ற நாடு இல்லை. அதற்கு முன்பே அது மதச்சார்பற்ற நாடு தான் என்பது உறுதி !.

எனவேதான் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்து இதனை திருத்த வேண்டும் என்று வழக்குகளை தொடுத்த போது அவற்றை தள்ளுபடி செய்து மறுத்து விட்டது.

## ஜனநாயகம் குறித்து கூடச் சொல்லப்படவில்லை!

மதச்சார்பின்மை அடிப்படை உரிமைகளிலேயே வலியுறுத்தப் பட்டிருக்கிறது. சொல்லப்போனால், அரசியல் சட்டத்தில் 'ஜனநாயகம்' என்ற சொல் அதை உருவாக்கிய போது இடம்பெறவில்லை. அதனால் இது ஜனநாயக நாடு இல்லை என்றாகிவிடுமா? அதுபோலவே அரசியல் கட்சி என்ற வார்த்தையும் அரசமைப்புச் சட்டத்தில் இல்லை. ஆனால் 'ஜனநாயகம் என்று குறிப்பிடப்படாத அரசியல் சட்டத்தில்தான் வயது வந்தோர்க்கு வாக்குரிமை, தேர்தல் ஆணையம் போன்றவை அமைந்துள்ளன. அதுபோலவே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்களை, அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் முறைமை போன்றவற்றையும் உருவாக்கி அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்து மதத்தில் தான் கொண்டு வந்த சட்ட திருத்தத்தை ஏற்காத காரணத்தால் தனது சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தவர் டாக்டர் அம்பேத்கர். ஆனால் இவர்களோ, பெற்ற பதவியைப் பாதுகாக்கவும், புதிய பதவிகளுக்கான வாய்ப்பைத் திறக்கவும் பேசி வருபவர்கள். இந்த நயவஞ்சக, பாசிசத்தின் முகமூடியைக் கிழித்தெறிய கருத்தியல் ஆயுதங்களை ஏந்துவோம் !

தொடர்புக்கு : 9444481703

# 23 வயதில் முதல் பொதுத் தேர்தலில் எம்.எல்.ஏ ஆன தோழர் கே.வி.ராமசாமி



ப.பரமசிவம்

**நாமக்கல்லுக்கு அருகில் உள்ள கிராமத்தில் நல்லியம்பாளையத்தில் வெள்ளைய கவுண்டர் காளியம்மாள் தம்பதியருக்கு 19.01.1923ல் முதல் மகனாகப் பிறந்தார். 1944 முதல் 1946 வரை சேலம் கல்லூரியில் படித்து வந்தார். கே.வி.இராமசாமி தமிழ்ப் பற்றினாலும் சுயமரியாதைக் கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு பெரியார் ஈ.வெ.ரா.வினால் துவக்கப்பட்ட திராவிடர் கழகத்தின் முக்கிய ஊழியராகச் செயல்பட்டார்.**

பல இடங்களில் மாவட்ட திராவிடர் மாணவர் கழக மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். அவருடன் சேலம் கல்லூரியில் தோழர் கே.செல்வராஜ் தொடர்பு வைத்தார். சேலம் கல்லூரியில் படிக்கிற பொழுது தோழர் ஜி.சாமுவேல் தர்க்க இயல் பேராசிரியராகப் பணியாற்றிவந்தார். தோழர் கே.செல்வராஜுடன் தொடர்பு கொண்டு மார்க்சிய நூல்களைப் படிக்க ஆரம்பித்தார். சாமுவேல் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும், சோவியத் யூனியன் மீதும் பற்றுகொண்டார்.

கல்லூரியிலேயே மார்க்சிய வகுப்பு எடுத்தார். அதையும் கேட்டு வளர்ந்தார் தோழர் கே.வி.ராமசாமி. மேல்படிப்பிற்காக கே.வி.இராமசாமி திருச்சிக்குச் சென்றார். அங்கே மாணவர் இயக்கத்தின் முன்னணித் தலைவராக இருந்த தோழர் எஸ்.தமோதரன் (தாமு) அவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டார். அதன் விளைவாக அவர் திராவிடர் கழகத்திலிருந்து விலகி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரானார். அதிலிருந்து தோழர் கே.வி.ராமசாமி முழுநேர அரசியலில் ஈடுபட்டார்.

சேலம் சதி வழக்கிலும், நாமக்கல், பள்ளிபாளையம் கலவர வழக்குகளிலும் முக்கியத் தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறைக்குள் வைக்கப்பட்டுவிட்டனர். ஆயினும் தோழர்கள் எஸ்.எம்.ராமையா, எஸ்.எம்.ரங்கசாமி, கே.வி.இராமசாமி ஆகியோர் கடைசிவரை போலீஸ் கைகளில் அகப்படவில்லை. அவர்கள் மூவரும் கட்சியின் மாவட்டப் பொறுப்பை ஏற்று பல சிரமங்களுக்கு இடையே தலைமறைவாக இருந்து செயல்பட்டனர்.

### 1952 பொதுத் தேர்தல்:

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் 1952ம் ஆண்டின் தொடக்கத்தில் தேசம் பூராவும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் கம்யூனிஸ்ட் கட்சி பல மாநிலங்களிலும் போட்டியிட்டது. சேலம் மாவட்டத்தில் மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடப்பட்டது.

சேலம் தொகுதியில் தோழர் மோகன்குமாரமங்கலமும் நாமக்கல் தொகுதியில் தோழர் கே.வி.இராமசாமியும் திருச்செங்கோடு தொகுதியில் தோழர் டி.எஸ்.அர்த்தனாரியும் நமது வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். தோழர் கே.வி.இராமசாமியும், டி.எஸ்.அர்த்தனாரியும் வெற்றி பெற்றனர்.

### தரிசு நிலம்:

ஆத்தூர் தாலுகாவில் உள்ள சாகுபடிக்குத் தகுதியுள்ள அரசு தரிசு நிலங்களை விவசாயிகளுக்கு அடமானம் செய்யும்படி தோழர் கே.வி.இராமசாமி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து சேலம் மாவட்டம் பூராவும் விரிவான இயக்கம் நடைபெற்றது. அந்தப் பிரச்சனையை வற்புறுத்த 1956ஆம் ஆண்டில் பெத்தநாயக்கன்பாளையத்தில் மாவட்ட விவசாயிகள் சங்க மாநாடு நடைபெற்றது. அதில் தோழர் பி.சீனிவாசராவ் கலந்து கொண்டார். தரிசு நில விநியோக இயக்கத்தைத் தீவிரப்படுத்த திட்டமிடப்பட்டது. இந்த இயக்கத்தில் தோழர் டி.இராமச்சந்திரன், ஐ.பாஷாகான் வாழப்பாடி சந்திரன், டி.சண்முகம் ஆகியோர் பங்கெடுத்தனர். அதன் விளைவாக அரசு தனி அதிகாரிகளை நியமித்து 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்கு அடமானம் செய்து கொடுத்தது.

### வெற்றிலைக் கொடிக்கால்:

தமிழ்நாட்டில் மிக நேர்த்தியான வெற்றிலை, சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. பரமத்தி வேலூரிலிருந்து வட மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் 1953 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வெற்றிலைக் கொடிக்காலில் நோய் பரவியது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கான வெற்றிலைக் கொடிக்கால் தொழிலாளிகள் வேலையிழந்தனர். வெற்றிலை மண்டித் தொழிலாளர்களும் உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டனர். இதற்காக ஒரு மாபெரும் இயக்கத்தை வெற்றிலை விவசாயிகளைத் திரட்டி நடத்தினார்கள்.

சட்ட சபையில் தோழர் கே.வி.இராமசாமி இதை எடுத்துக் கூறி வெற்றிலைக் கொடிக்கால் நோயைத் தீர்க்க ஒரு ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்தும்படிச் சட்டமன்றத்தில் வற்புறுத்தினார். அதன் விளைவாக பரமத்தி வேலூர் பகுதியில் ஒரு மாதிரிப் பண்ணை ஏற்படுத்தப்பட்டு ஆராய்ச்சி நடைபெற்றது, நோயும் அகற்றப்பட்டது.

ஆத்தூரில் 1963ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட கலை இலக்கியப் பெருமன்ற மாநாடு நடத்தப்பட்டது. தோழர்கள் ஐ.பாஷாகான், டி.சண்முகம் முன்னின்று நடத்தினார்கள். அதில் தோழர்கள் ஜீவா, தொ.மு.சி.ரகுநாதன், த.பாண்டியன், பொன்னிவளவன் ஆகியோர் மாநாட்டில் பங்கு கொண்டனர். மாநாட்டில் நாமகிரி தாமோதரன், மகள் கல்பனாவின் கலை நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

அதன் பின்னர் சேலத்தில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவராக கே.வி.இராமசாமியும் செயலாளராக தோழர் வாழப்பாடி சந்திரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1967ஆம் ஆண்டு டிசம்பர் 22, 23 தேதிகளில் நமது கட்சியின் ஏழாவது மாவட்ட மாநாடு சூரமங்கலத்தில் உள்ள சத்திரத்தில் நடைபெற்றது. அதில் தோழர்கள் கே.டி.கே.தங்கமணி, பாலதண்டாயுதம் இருவரும் பங்கு கொண்டனர். அந்த மாநாட்டில் கே.வி.இராமசாமி மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

18.01.1970 சேலம் நகரில் கட்சியின் ஸ்தாபன சீரமைப்பு மாநாட்டை நடத்தினார். அதில் தோழர்கள் எம்.கல்யாணசுந்தரம், தோழர் கே.பாலதண்டாயுதம் இருவரையும் பங்கெடுக்க வைத்தார்.

### நில மீட்சிப் போராட்டம்:

வரலாற்றுச் சிறப்புமிக்க அகில இந்திய நில மீட்சிப் போராட்டம் கே.வி.ஆர் தலைமையில் 1970ல் நடைபெற்றது. அதில் 848 பேர்கள் கைது செய்யப்பட்டு 25 நாட்கள் கழித்து விடுவிக்கப்பட்டனர். கல்லேரிபட்டி வன நிலம், குடுவம்பட்டி வன நிலம், செங்காடு வன நிலங்கள்,



சேர்வராயன் மலை அடிவாரத்தில் உள்ள வன நிலங்களில் நமது போராட்ட வீரர்கள் செங்கொடியோடு அணி அணியாகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் கைதானதால் ஜவஹர்மில் தொழிலாளியாகப் பணிபுரிந்த தோழர் பிராஜீ வேலைநீக்கம் செய்யப்பட்டார். அதன் பிறகு அவர் சேலம் முனிசிபால்டி தொழிற்சங்கத் தலைவராகப் பணிபுரிந்தார்.

### அகில இந்திய மாதர் சங்க மாநாடு:

சேலத்தில் 1970ல் டிசம்பர் 27 முதல் 30 தேதி வரை 4 நாட்கள் அகில இந்திய மாதர் தேசியச் சம்மேளனத்தின் மாநாட்டை சேலத்தில் முன்னின்று நடத்தினார். சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, வியநாட்நாம், ஹங்கேரி, மங்கோலியா, அர்ஜெண்டீனா ஆகிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்பட 700 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். 7000 க்கும் மேற்பட்டோர் அணிவகுப்பில் கலந்து கொண்டனர். ராணி அண்ணாதுரை மாநாட்டைத் தொடங்கி வைத்தார், அருணா ஆசப் அலி, ரேணுசக்கரவர்த்தி, விமலாபருக்கி ஆகியோர் பங்கு கொண்டனர். நாமகிரி தாமோதரன் மாநாட்டு வரவேற்புக் குழுவாக இருந்து செயல்பட்டார். அப்பொழுது மாதர் சங்க மாவட்டச் செயலாளராக வசந்தா கிருஷ்ண மூர்த்தியும் மாவட்டத் தலைவராக ராமகிரி தாமோதரனும் இருந்தார்கள்.

கே.வி.ராமசாமி மாவட்டச் செயலாளராக இருந்த காலகட்டத்தில் செட்டிசாவடி நிலப் போராட்டம், சங்ககிரி சிமெண்ட் தொழிலாளர் போராட்டம், சர்வகட்சி விவசாயிகள் போராட்டம், மேகன சைட் தொழிலாளர் கான்ட்ராக்ட் முறையை ஒழிக்க நடத்திய போராட்டம் கிளாஸ் பேக்டரி தொழிலாளர் போராட்டம், பள்ளிபாளையம் விசைத்தறித் தொழிலாளர் போராட்டம், மோகனூர் சர்க்கரை ஆலைப் போராட்டம் ஆகிய போராட்டங்களுக்கு உடன் இருந்து செயல்பட்டார்.

1977ம் ஆண்டு சாலை விபத்தில் கட்சி அணிகளை மீளாத் துயரில் ஆழ்த்திச் சென்று மறைந்துவிட்டார். தோழர் கே.வி.ராமசாமி போன்ற மாபெரும் தலைவர்கள் கட்டி வளர்த்த கட்சிதான் சேலம் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கே.வி.இராமசாமி நினைவாக சேலம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திற்கு கே.வி.ஆர்.இல்லம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

கட்சிப் பிரசுரங்களைத் தனது பையிலேயே வைத்துக் கொண்டு ஒவ்வொரு கூட்டத்திலும் தானே விற்று மாநில மையத்திற்குப் பணக் கஷ்டம் வராமல் பார்த்துக்கொள்வார். அந்த சேலம் மாவட்டத்தில்தான் மாநில மாநாடு நடக்கிறது தமிழ் மாநிலமே திரளட்டும்!!!


தொடர்புக்கு: 9442995040

## வெறுப்புக் குற்றங்களின் தலைமையகம் பாஜக

நரேந்திரமோடி மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்ற ஒரே ஆண்டில் வெறுப்புக் குற்ற நிகழ்வுகளில் பாஜக முதலிடத்தில் உள்ளது.

சிவில் உரிமைகள் பாதுகாப்பு சங்கம் (Association for Protection of Civil Rights ஏபிசிஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில், மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமரான பின்னர், ஒரே ஆண்டில் 947 வெறுப்புக் குற்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. இவற்றில் 345 வெறுப்புப் பேச்சுகள்; 602 வெறுப்புக் குற்றங்கள் ஆகும். இந்த 602 வெறுப்புக் குற்றங்களில் 173 குற்றங்கள் சிறுபான்மையினரை இலக்காகக் கொண்ட உடல் ரீதியான வன்முறையை உள்ளடக்கியது. அவற்றில் 25 குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழந்தனர். சிறுபான்மையினரை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட அனைவரும் இஸ்லாமியர்கள் ஆகும்.

2024 ஜூன் 7 முதல் 2025 ஜூன் 7 வரை பதிவான 345 வெறுப்புப் பேச்சுக்களில், 178 பேச்சுக்கள் பாஜக மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர்களால் பேசப்பட்டவை. இவற்றில் 5 வெறுப்புப் பேச்சுக்கள் பிரதமர் மோடியால் நிகழ்த்தப்பட்டுள்ளன. பாஜக அரசுகளின் முதலமைச்சர்களால் 63 பேச்சுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. பாஜக எம்.பி., எம்எல்ஏக்களால் 71 பேச்சுகள் நிகழ்த்தப்பட்டன.



345 வெறுப்புப் பேச்சுகளில், பாஜக 178 வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளுடன் முதலிடத்திலும், விஷ்வ இந்து பரிஷத் 21 வெறுப்புப் பேச்சுகளுடன் இரண்டாவது இடத்திலும், பஜ்ரங் தளம் மூன்றாவது இடத்திலும் உள்ளன என்று ஏபிசிஆர் அறிக்கை கூறியுள்ளது. அதாவது பாஜக தான் வெறுப்புக் குற்றங்களின் தலைமையகம். பாஜகவிடம் இருந்து பெறப்படும் உத்தரவுகள் மூலமே வெறுப்புக் குற்றங்கள் நிகழ்கின்றன.

**தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் இருபதாம் நாள் நெசவாளர் தினமாக அனுசரித்து, இயக்கத்தினைத் தலைமை தாங்கி நடத்திய வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செய்து வருகிறோம். நெசவாளர் தினம் கடைப்பிடிப்பதின் பின்னுள்ள வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.**

# ஜூன் 20 கைத்தறி நெசவாளர் தின வரலாறு



1942–43 ஆண்டு முதல் நெசவாளர்களுக்குத் தறிநெய்வதற்கு நூல் கிடைக்காமல் தொழில் முடங்கிப் போய் வாழ்வாதாரம் இல்லாத சூழ்நிலையை நெசவாளர் வர்க்கம் சந்தித்தது.

நம்மை ஆண்ட பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் விவசாயிகள் விளைவித்த பருத்தி தன்னாட்டிற்கு ஏற்றுமதி செய்து தன்னாட்டிலேயே நூலாக நூற்றி உலகச் சந்தையில் விற்றுக் கொள்ளை லாபம் அடித்தது. இதன் காரணமாக இந்தியாவில் கைத்தறித் துணி உற்பத்திக்குத் தேவையான பருத்தி, சாயப் பவுடர் தயாரிக்கும் அவுரி செடி இன்னும் ஜவுளி உற்பத்திக்குத் தேவையான வேளாண் பொருட்கள் அனைத்தும் கொள்ளையடித்தது பிரிட்டிஷ் அரசு.

இதன் காரணமாக இந்தியாவில் பருத்தி நூல் உற்பத்தி பாதிக்கப்பட்டு நெசவாளர்களுக்குத் தொழில் செய்ய நூல் கிடைக்காமல் தவித்தார்கள். இதே காலகட்டத்தில்தான் இரண்டாம் உலகப் போர் நடந்தது. உலகப் பெரும் போர் நடந்த காலத்தில் பிரிட்டிஷ் அரசு நிர்வாகம் முழுமையும் உலகப் பெரும் போர் நெருக்கடியில் இருந்ததால் நெசவாளர்கள் சந்தித்த துயரம் சொல்லி மாளாது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நூல்கேட்டுப் போராட்டங்கள் நடத்தினார்கள். அன்றைய நாளில் நெசவாளர்களது ஒரே ஒரு கோரிக்கைதான். அதாவது நெய்வதற்கு நூல் வேண்டும்.

பஞ்சம் பட்டினியைச் சந்தித்த நெசவாளர்கள் இடம்பெயர்ந்து போய் கிடைத்த வேலைகளைச் செய்து பிழைப்பை நடத்தி வந்தார்கள். வாழ்க்கையில் மிகத் துயரம் நிறைந்த சூழலாக இந்த நேரத்தில் நெசவாளர்கள் ஒன்றுபட்ட போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

நெசவாளர்களின் போராட்டம் தமிழ்நாடு பூராவும் பரவியது. கோரிக்கை ஒன்றுதான் வேலை வேண்டும், வேலை செய்ய நூல் வேண்டும்.வீறுகொண்ட நெசவாளர்களின் போராட்டத்தின் விளைவாகக் கோரிக்கையைபிரிட்டிஷ் அரசு நெசவாளர்களுக்கு நூல் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தது. அதற்காக ரேசன் முறையில் நெசவாளர்களுக்கு நூல் விநியோகம் செய்ய முடிவு செய்தது.

நெசவாளர்களுக்கு நூல் வாங்குவதற்கான அடையாள அட்டைகளும் வழங்கியது. ஆனால், தொழிலின்றி வாழ்வாதாரம் நிலை குலைந்த நெசவாளிகளுக்கு ரேஷன் முறையில் கொடுத்த நூலைப் பணம் கொடுத்து வாங்க முடியாத சூழல்.

இந்நேரத்தில் ஜவுளி உற்பத்தியாளர்களிடம் ரேஷன் அட்டையைக் கொடுத்து அவர்களை நூல் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்குத் தொழில் கொடுத்தால் போதும் என்ற நிலையில், நூல்களை வாங்கித் தொழில் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் ரேஷன் அட்டைகளை உற்பத்தியாளர்களிடம் அதாவது மாஸ்டர் வீவர்களிடம் அடையாள அட்டைகளைக் கொடுத்தார்கள்.

நெசவாளர்கள் கொடுத்த அடையாள அட்டைகளை வைத்துக்கொண்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் நூல் கொள்முதல் செய்து கொண்டார்கள். ஆனால், உற்பத்தியாளர்கள் நெசவாளர்களுக்குத் தொழில் கொடுக்கவில்லை. நியாய விலையில் ரேஷன் கடைகளில் நூல்களை வாங்கி, வாங்கிய நூல் பேல்களைப் பதுக்கி விட்டார்கள் உற்பத்தியாளர்கள்.

கைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு உற்பத்தியாளர்கள் தொழில் கொடுக்காமல் ஏமாற்றி விட்டார்கள் மாஸ்டர் வீவர்கள். இவர்களின் இந்தக் கொடுமையான செயலைப் பொறுக்க முடியாமல்தான் வெகுண்டு எழுந்த நெசவாளர்கள் போராட்டம் நடத்திட முடிவு செய்தார்கள். தொழில் கிடைக்காமல் வஞ்சிக்கப்பட்ட நெசவாளர்கள் ஆங்காங்கே ஒன்று திரண்டு போராட ஆரம்பித்தார்கள்.

1942 ஆம் ஆண்டில் வேலை கேட்டும் தொழில் செய்ய நூல் கேட்டும் போராட்டம் நடந்த பல இடங்களில் ஒன்றுதான் கரூர். கரூர் மோட்டாரகம் நெய்யும் நெசவாளர்கள் அதிகம் நிறைந்த மாவட்டமாகும். ஜமக்காளம், திரைவிரிப்புகள், டவல் துண்டுகளெனப் பல்வேறு விதமான சிறந்த மோட்டாராகத்துணி வகைகளை உற்பத்திச் செய்து குவிக்கின்ற நெசவாளர்கள் நிறைந்த கரூர். கரூரில்தான் நெசவாளர்கள் போராட்டத்தைத் துவக்கினார்கள். முதல் கட்டமாக தங்களுடைய நெருக்கடிகளைப் பொதுக் கூட்டங்களை நடத்தி விளக்கிப் பேசினார்கள்.

இரண்டாம் கட்டப் போராட்டமாக ஊர்வலங்கள் நடத்தினார்கள், ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மூன்றாம் கட்டப் போராட்டமாக அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

இப்போராட்ட தளபதியாக ஒத்த கருத்தோடு கே.எஸ்.சோமு அவர்களைத் தலைமை தாங்க வேண்டுமென முடிவு செய்தார்கள். எனவே, கே.எஸ்.சோமு அவர்கள் தன்னுடைய கூர்மையான சிந்தனையோடு போராட்டத் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிகாட்டினார். நெசவாளர்களைத் திரட்டினார்.

மறக்க முடியாத அந்த நாள் போராட்டம் கே.எஸ்.சோமு அவர்கள் தலைமையில் மாஸ்டர் வீவர்கள் வீட்டுக்கு முன்பு ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் திரண்டார்கள்.

கல்லும் கரையும் என்பார்கள். ஆனால், ஜவுளி உற்பத்தியாளர்களின் மனது கரையவில்லை, இரக்கம் கொள்ளவில்லை. அங்கு கூடியிருந்த நெசவாளர்கள் தங்களுடைய குடும்பத்தோடு கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டார்கள். இந்தப் போராட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாக தங்களுடைய வாழ்வாதாரக் கோரிக்கைக்காகத் திரண்டு வந்திருந்தார்கள்.

அப்பொழுது மேல் மாடியில் அதாவது பால்கனியிலிருந்தமாஸ்டர்வீவர்களின்பிரதிநிதிகள் ஏளனச் சிரிப்போடு 'கத்துங்கடா கத்துங்கடா' எனப் பல் இளித்துக் காட்டிப் போராடுகின்ற தொழிலாளர்களுக்கு ஆத்திரமூட்டினார்கள். அது மட்டுமல்லால் பால்கனியிலிருந்து காய்ச்சிய எண்ணெய்யைப் போராடும் நெசவாளர்கள் மீது ஊற்றினார்கள். பொறுக்க முடியாத இளம் நெசவுத் தொழிலாளர்கள் சிலர், கதவுத் தாழ்ப்பாளை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து விட்டதாக அறியப்படுகிறது. அந்நேரத்தில்தான் நமது கரூர் காந்தி என அழைக்கப்படும் கே.எஸ்.சோமு அவர்கள் ஆத்திரமடைந்த அந்நெசவுத் தொழிலாளர்களை இரு கரம்கூப்பி அமைதிப்படுத்தியுள்ளார். உள்ளே இருந்த ஜவுளி உற்பத்தியாளர் சிலர், இனி என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது எனக் கருதி உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்து விட்டார்கள்.

கே.எஸ்.சோமு மற்றும் அவருடன் இருந்த தோழர்கள் உள்ளே சென்று பார்த்து இருக்கிறார்கள்.

உள்ளே சென்று பார்த்த தலைவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்களாம். முதலாளிகள் வீட்டுக்கு உள்ளே நூற்றுக்கணக்கான நூல் கட்டு பேல்கள். இரும்புப் பெட்டியில் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகள். அந்தந்த இடத்தில் அப்படி அப்படியே இருந்ததைப் பார்த்து நெசவுத் தொழிலாளர்களின் நேர்மையும், ஒழுக்கமும், கட்டுப்பாடும், நாணயமும் கண்டு வியந்திருக்கிறார் சோமு.

நெசவாளர்கள் எப்போதும் சாதுவாகவே இருப்பார்கள் போராட்ட குணம் என்றால் நிலை குலையாமல் ஒன்றுபட்டுப் போராடுவார்கள். இந்நிகழ்வுகளை எல்லாம் பார்த்து தலைமை தாங்கிய தலைவர்கள் அத்தனை பேரும் மனதுக்குள் நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்து விட்டோம் என்று கே.எஸ்.சோமு சொன்னார்.

இதுதான் கரூர் போராட்டம். கரூர் நகர நெசவாளர் போராட்டத்தின் நினைவுதான் ஜூன் 20ஆம் நாள். இதை நாம் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இதே போராட்டத்தைத் தொடர்ந்து தமிழகமெங்கும் கைத்தறியாளர்கள் போராட்டம் நடந்திருக்கிறது. இதற்கு 'நூல் கேட்டுப் போராட்டம்' என்று சொல்வார்கள். பரமக்குடி எமனேஸ்வரத்தில் தூடா.லெட்சுமண ஐயர் இப்போராட்டத்தினுடைய முன்னணித் தளபதியாவார். இவரோடு சேர்ந்து பரமக்குடியைச் சார்ந்த என்.வி.கே விஸ்வநாதன் இணைந்து நூல் கேட்டுப் போராடி இருக்கிறார்கள்.

மதுரையில் ஆர்.வி.சித்தா. இவர் ஒரு விடுதலைப் போராட்ட தியாகி. ஆர்.கே.சாந்துலால் இவர் விடுதலைப் போராட்ட தியாகி ஆவார். இவர்களைப் போன்ற தலைவர்கள் மதுரையினுடைய தளபதிகள். காஞ்சிபுரத்தில் கே.எஸ். பார்த்தசாரதி, என்.ஆர்.முனுசாமி ஆகியோர் போராட்டத் தளபதியாக இருந்திருக்கிறார்கள்.

கும்பகோணத்தில் சோமுராவ், உத்தான், கோவிந்தராஜ் போராட்டத் தளபதிகள், சேலத்தில் தியாகி உத்தம லிங்கம் தளபதியாவார்.

தமிழ்நாடு பூராவும் பல இடங்களில் கைத்தறி நெசவாளர்களின் போராட்டத்தை நடத்தி வெற்றிகளை ஈட்ட, தடியடி பட்டு ரத்தம் சிந்தியவர்களுக்கும் சிறைக் கொட்டடிகளில் துயரத்தை அனுபவித்தவர்களுக்கும் இந்தப் போராட்டத் தளபதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 20 ஆம் தேதி வீரவணக்கம் செலுத்தும் நாளாக ஏஐடியூசியின் தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சம்மேளனம் கடைப்பிடித்து வருகிறது. நெசவாளர் நல வாழ்வுக்காகப் போராடி தியாகம் செய்த அந்த வீரத் தியாகிகளின் நினைவைப் போற்றிச் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி வணங்கிறோம். ஏஐடியூசி வாழ்க. நெசவாளர் சம்மேளனம் வாழ்க. தியாகிகளின் புகழ் வாழ்க.

**எஸ்.பி.இராதா**

## படிப்பைத் தொடர முடியாமல் போராடும் மருத்துவ மாணவர் ஏ.ஹரிகரன்

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் பயின்று, தற்பொழுது சண்டிகர் முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (PGI Chandigarh) உயர் சிறப்பு மருத்துவம் பயின்றுவந்தவர் டாக்டர் ஏ.ஹரிகரன். கும்பகோணம் அருகில் உள்ள பந்தநல்லூரைச் சேர்ந்தவர்.

அவர் PGI Chandigarh கல்லூரியின் மாணவர் பேரவைத் தேர்தலில், மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவர் பேரவைத் தலைவராகச் செயல்பட்டார்.

மாணவர்கள் நலன்களுக்காக முன்னின்று போராடியதற்காகக் கல்லூரி நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டுள்ளார்.

அவர் தற்பொழுது படிப்பைத் தொடர முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த, சாதாரண குடும்பத்திலிருந்து மருத்துவராகியுள்ள அவரது பிரச்சினைக்குத் தீர்வு காண, அவர் மீண்டும் தனது உயர் சிறப்பு மருத்துவப் படிப்பைத் தொடர தமிழ்நாடு அரசு உதவிட வேண்டும்.


பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் மருத்துவம் உள்ளிட்ட படிப்புகளை மேற்கொள்ளும் மாணாக்கர்களின் நலன் காப்பது தமிழக அரசின் கடமையாகும்.

தமிழ்நாடு அரசு மருத்துவர் ஹரிகரனுக்கு உடனடியாக உதவிட வேண்டும்.

உதவி கேட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் வேண்டுகோள் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

ஜனசக்தி

## சீனாவில் கொசு அளவில் டிரோன்: ராணுவத் தொழில்நுட்ப வளர்ச்சி



சீனாவில் வெறும் 6 மில்லி மீட்டர் அளவில் கொசு போன்று டிரோன் உருவாக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் (NUDT) அதிநவீன ராணுவத் தொழில்நுட்பம் மூலமாக இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த டிரோன் பற்றிய தகவல்களை சீனாவின் ராணுவத் தொலைக்காட்சியான சிசிடிவி7 (CCTV 7) அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. இதன்மூலம் சைபர் மற்றும் பிற குற்றங்களின் கண்காணிப்புகளைத் தீவிரப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்பிரிக்க நாடுகளுக்கு வரி விலக்கு: சீனா அறிவிப்பு

சீன ஆப்பிரிக்க ஒத்துழைப்பு மன்றத்தின் (FOCAC) கூட்டம், ஜூன் இரண்டாம் வாரம் சீனாவில் உள்ள ஹுனானில் நடைபெற்றது. இதில், 53 ஆப்பிரிக்க நாடுகளும், ஆப்பிரிக்க ஒன்றிய ஆணையத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். 2024 பெய்ஜிங் உச்சி மாநாட்டு உறுதிமொழிகளின் முன்னேற்றம் குறித்து விவாதித்து அவர்கள் மதிப்பீடு செய்தனர். எதிர்கால ஒத்துழைப்புக்கான திட்டங்களையும் வகுத்தனர்.

இதன் அடிப்படையில், ஸ்வாசிலாந்து நாடு தவிர ஒட்டுமொத்த ஆப்பிரிக்க நாடுகளுக்கும் 100 விழுக்காடு வரி விலக்கு சீனா அறிவித்துள்ளது. இதனால் சீன ஆப்பிரிக்க வர்த்தக உறவுகள் மேலும் வலுப்படுவதுடன், ஆப்பிரிக்க நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி சார்ந்த புதிய வாய்ப்புகள் உருவாகும். அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் பாதுகாப்பு வாதக் கொள்கைகள் என்ற பெயரில் வளரும் நாடுகள் மீது வரிகளை விதித்து வரும் நிலையில், சீனா நூறு விழுக்காடு வரி விலக்கு அளித்திருக்கிறது.

## அதிபர் டிரம்ப் வசைபாடிய ஜோஹ்ராம் மம்தானி



அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக இந்திய வம்சாவளி இளைஞர் ஜோஹ்ரம் மம்தானி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் சக வேட்பாளரான ஆண்ட்ரிவ் கியுமோவை விட 40 விழுக்காடு அதிக ஆதரவு பெற்று வேட்பாளராகியுள்ளார். நியூயார்க் நகர மேயர் தேர்தல் நவம்பரில் நடக்க உள்ளது.

ஜோஹ்ரம் மம்தானி “ஈரான் நாட்டிற்குள் நுழைந்து அமெரிக்க வான்படை நடத்திய தாக்குதலை இறையாண்மை மிக்க நாட்டின் மீதான தாக்குதல்” என்று சாடினார். “காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிக்கவேண்டும்” என்று வலியுறுத்தினார். “ஏழைகளின் துயரத்தைத் துடைக்க ஜனநாயகக் கட்சி முன்வரவேண்டும்” என்கிறார். மம்தானி நிறவெறிக்கு எதிராகப் பேசுகிறார். வலதுசாரி அரசியலை எதிர்க்கிறார்.

ஜோஹ்ரம் மம்தானியின் இந்தப் பேச்சுக்கள் அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. “100 விழுக்காடு கம்யூனிஸ்ட் பைத்தியக்காரன்” என்று சாடியுள்ள அதிபர் டிரம்ப், “மம்தானி போன்றோர் மேயராவது அபத்தமானது” என வசை பாடியுள்ளார். இந்தியாவில் கங்கனா ரனாவத் போன்ற அரைவேக்காடுகளும் அவரைத் திட்டுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்ற போது, “அவரை ஜனநாயகக் கட்சி வரவேற்கக் கூடாது, ஏனென்றால் அவரது கைகள் ரத்தக்கறை படிந்தவை. குஜராத் வன்முறையில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதை வேடிக்கை பார்த்தவர்” என்று மம்தானி கடுமையாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மக்களவை
# மாநில உரி



மே.து.ரா.

**இந்திய ஒன்றியத்தில் மக்களவைத் தொகுதிகளின் மறுசீரமைப்பு, முடிவுகளை எட்டாமல் குழப்பத்திலேயே நீடித்துக்கொண்டிருக்கிறது.**

தற்போது இருக்கின்ற மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொகுதிகள் மறுசீரமைக்கப்படுமா அல்லது இன்றைய மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுமா என்பது குறித்த தெளிவான கருத்தினை ஒன்றிய அரசு அல்லது பாரதிய சனதாக் கட்சி இதுவரை வெளிப்படுத்தவில்லை.

இப்போது இருக்கின்ற 543 என்ற எண்ணிக்கை 800க்கு மேல் உயர்த்தப்படும் என்றும், மாநிலங்களுக்கான எண்ணிக்கை குறையாது என்றும் மட்டுமே குழப்பமான விளக்கத்தினைப் பா.ச.க.வினர் கூறி வருகின்றனர்.

மக்களவை உறுப்பினர்களின் கூட்டு அளவு கூடும்போது, ஒவ்வொரு பெரிய மாநிலத்துக்குமான எண்ணிக்கையும் மிகும் என்பது உண்மைதான். ஆனால், இந்தக் கூடுதல் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படும் என்பதை எடுத்துரைக்கப் பா.ச.க.வினர் முன்வரவில்லை அல்லது தயங்குகின்றனர்.

### மறுசீரமைப்பில் எண்ணிக்கை இழப்பு

அண்மை காலங்களில் மக்கள் தொகை வளர்ச்சி தென் மாநிலங்களில் 12.51% என்ற அளவில் இருக்கிறது. ஆனால், வட மாநிலங்களின் மக்கள் தொகை வளர்ச்சி 21.83% என உள்ளது. இந்த ஏற்றத் தாழ்வுகளால், தென் மாநிலங்களுக்கான மக்களவை இடங்கள் குறைந்து, வட மாநிலங்களின் எண்ணிக்கை கூடிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த 58 ஆண்டுகளிலும், மேற்குவங்கத்தில் கடந்த 48 ஆண்டுகளிலும் காங்கிரசாரோ, பா.ச.க.வினரோ மாநில ஆட்சிக்கு வர முடியவில்லை. கேரளாவில் காங்கிரசார் அவ்வப்போது மாநில ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும், ஒன்றிய அரசின் கண்ணோட்டங்களோடு ஒன்றிப்போக முடியாத நிலைதான் தொடர்ந்தது.

இந்த நிலையில், அந்த மாநில மக்களது உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் பண்பாட்டுப் பின்புலத்துக்கும் மாறாகவே ஒன்றிய அரசுகள் செயல்பட்டு வந்திருக்கின்றன வருகின்றன.

மக்களாட்சி மரபுகளுக்கு எதிராக இந்திய ஒன்றிய அரசமைப்பில் உள்ள பல குறைபாடுகளையும் முரண்களையும் திருத்த இதுவரை எத்தகைய முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. அவ்வப்போது மாநிலக் கட்சிகள் சில ஒன்றிய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தாலும், பெரும் மாறுதல்களை நிகழ்த்திவிடக்கூடிய சூழல் ஏற்பட்டுவிடவில்லை. அழுத்தம் தரும் ஆளுமையும் இருக்கவில்லை.

இந்த நிலையில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு மக்கள் தொகை அடிப்படையில் நடத்தப்பட்டால், தங்களுக்குப் பெரும் இழப்புகள் நேரும் என்ற அச்சம் பல மாநிலங்களில் தலைதூக்கியுள்ளது.

குறிப்பாக, தென் மாநிலங்கள், மேற்கு வங்கம், ஒடிசா, பஞ்சாப், வட கிழக்கு மாநிலங்கள் ஆகியன தங்களது இருப்புத் தன்மையும் வலியுறுத்தும் திறனும் குறைந்துவிடும் என்று கருதுவதைப் புறக்கணித்துவிடக் கூடாது.

### இன்றைய நிலை தொடரவேண்டும்

இந்திய ஒன்றியத்தில் மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைப்புச் செய்வது நடைமுறையில் இருந்தாலும், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி உள்ள நிலையே அடுத்த 25 ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று 2000த்தில் அப்போதைய தலைமை அமைச்சர் வாச்பாயி கூறியிருந்தார். இதனால், தற்போது, 2021 மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறு சீரமைப்புச் செய்யவேண்டும். ஆனால், பெருந்தொற்றினால் 2021இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இப்போது மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் தொடங்கியுள்ளதால் அடுத்து மக்களவைத் தொகுதி மறு சீரமைப்பும் மேற்கொள்ளப்படும் நிலை உள்ளது.

இதனால்தான், 1971 அடிப்படையில் மேலும் 25 ஆண்டுகளுக்கு மக்களவை எண்ணிக்கை தொடரவேண்டும் என்று மாற்றுக் கட்சி மாநில அரசுகளும் எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் முயற்சியில் கேரள முதல்வர் பினராயி விசயன், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், கர்நாடகத் துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், தெலங்கானாவின் ராட்ரிய சமிதியின் செயல் தலைவர் கே.டி. ராமாராவ் உள்ளிட்டோர் நேரிலும், ஒரிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் காணொளி வழியிலும் பங்குகொண்ட 2025 மார்ச்சு 22 கூட்டத்தில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றிய மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது என்றும், அதற்கேற்ப அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### சமூக நீதி தந்த பயன்

இந்தக் கூட்டத்துக்கு முன்னர், 2025 மார்ச்சு 5இல் நடத்தப்பட்ட தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தின் முடிவுகள் மேலும் தெளிவாக இருந்தன என்றுதான் கூறவேண்டும்.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சமூக, பொருளிய நலத்திட்டங்களைச் செம்மையாகச்



# த் தொகுதி மறுசீரமைப்பில் மைகள் மதிக்கப்படவேண்டும்



செயல்படுத்தியதால் மக்கள் தொகை தமிழகத்தில் கட்டுக்குள் உள்ளது சுட்டிக்காட்டத்தக்கது. அதாவது, குடும்பக் கட்டுப்பாடு மட்டுமல்லாது, கல்வி, சமூக நீதி மேம்பாடுகளினாலும் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை விளக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பங்கு இன்றைய இந்திய ஒன்றியத்தின் மக்களவையில் 7.18% என உள்ளது. இது குறையக்கூடாது என்பதுதான் தமிழ்நாட்டின் எதிர்பார்ப்பாகும்.

இப்போதிருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை விழுக்காடு அளவில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டாலும், உத்திர பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு மிகுதியான இடங்கள் கிடைத்து, இப்போதைய ஒப்புமை நிலையை மாற்றிவிடும் என்ற கருத்தும் சில மாநில முதல்வர்களால் முன்மொழியப்பட்டிருக்கிறது.

இதனால்தான், இப்போதுள்ள எண்ணிக்கை அடிப்படையில் உயர்த்துதல் அல்லது மக்கள் தொகை அடிப்படையில் உயர்த்துதல் ஆகிய இரண்டு நிலைகளும் மறுக்கப்பட்டுள்ளன. 543 என்ற இன்றைய எண்ணிக்கை நிலையே நீடிக்கவேண்டும் என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இப்போதுள்ள மக்களவை எண்ணிக்கை நிலை, மாநிலங்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் வேண்டல்களையும் முன்னேற்றங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றத்தக்கதாக இருக்கிறதா என்ற அடிப்படையான வினாவும் எழாமல் இல்லை.

### பா.ச.க.வின் மறைமுகத் திட்டம்

இத்தகைய புதிருக்கும் புயலுக்கும் இடையில்தான் புதிய புகைச்சலை மாநிலங்களவை உறுப்பினரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் ராட்ரிய லோக் மோர்ச்சா கட்சியின் தலைவருமான உபேந்திரா குசுவாகா கிளப்பியிருக்கிறார்.

1. மக்களவையில் பீகார், உ.பி. மாநிலங்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கை ஒப்பபீட்டளவில் இப்போது குறைவாக உள்ளது

2. ஆங்கில ஆட்சிக் காலத்தில் 1881ஆம் ஆண்டு முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தொடங்கியதிலிருந்து, 1947 விடுதலை வரை தென் மாநிலங்களின் மக்கள் தொகை வளர்ச்சி மிகுதியாகவே இருந்தது

3. அந்தக் காலகட்டத்தில் பீகாரிலும் உ.பி.யிலும் ஏற்பட்ட வறட்சி மற்றும் தொற்றுக்களால் அப்போது மக்கள் தொகை வளர்ச்சி மிகவும் குறைந்துவிட்டது

4. குடும்பக் கட்டுப்பாட்டினால் மட்டுமே தென் மாநிலங்களுக்கான எண்ணிக்கை குறைந்துவிட்டது என்பது திக்குத் திருப்புவதாக உள்ளது

5. தென் மாநிலங்களில் 21 லட்சம் மக்களுக்கு ஒரு மக்களவைத் தொகுதி என்று உள்ளதற்கு மாறாக, பீகார், உ.பி. போன்ற மாநிலங்களில் 31 லட்சம் மக்கள் ஒரு மக்களவை உறுப்பினரைத் தேர்தெடுக்கின்றனர்

6. குடும்பக் கட்டுப்பாட்டினால் அல்லாமல், கல்வி முன்னேற்றத்தினால்தான் மக்கள் தொகை தென் மாநிலங்களில் குறைந்தது

7. இந்தி மாநிலங்களில் கல்விப் பரவல் தற்போது பெருகி வருவதால், மக்கள் தொகை அடுத்து வரும் காலங்களில் கட்டுப்படுத்தப்படும் என்றாலும், இப்போதைக்கு அந்த மாநிலங்களின் உறுப்பினர் எண்ணிக்கை, இன்றைய மக்கள் தொகைக்கு ஏற்பவே மிகுதிப்பட வேண்டும்.

இவற்றில் நோக்கங்கள் பல மறைந்துள்ளன. தென் மாநிலங்களில் ஒரு மக்களவைத் தொகுதிக்கு வாக்காளர் 21 லட்சம், வடமாநிலங்களில் 31 லட்சம் என்ற கூற்று உண்மையல்ல.

இது போலவே, விடுதலைக்கு முன்னர் தென் மாநிலங்களின் மக்கள் தொகை வளர்ச்சி பெருமளவில் இருந்தது என்பதையும், பீகார், உ.பி. போன்ற மாநிலங்களில் வறட்சி மற்றும் தொற்றுக்களால் குறைந்து விட்டது என்பதையும் புள்ளிவிவரங்கள உறுதி செய்யவில்லை.

குடும்பக் கட்டுப்பாடு மட்டுமல்லாது, சமூகநீதி, கல்வி, பொருளிய வளர்ச்சி போன்ற காரணிகளால் மக்கள் தொகை வளர்ச்சி சீராக்கப்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இது ஒரு சில ஆண்டுகளில் நிகழ்ந்ததல்ல. கடந்த 100 ஆண்டு கால வளர்ச்சியும் முன்னேற்றமும் கொடுத்த பயன்கள் பல. ஆனால், சமூக நீதியினை இன்னும் தொடங்காத மாநிலங்கள், சனாதனக் கட்டுக்களில் மூழ்கிக் கிடக்கும் மாநிலங்கள் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் காணக் குறைந்தது இன்னும் பல பத்தாண்டுகள் ஆகும்.

அதுவரை மக்கள் தொகைப் பெருக்கத்தின் அளவு அந்த மாநிலங்களில் குறையப்போவதில்லை.

### ஒற்றையாட்சிக்கு வழிவகுக்கும் ஒன்றிய அரசு

இந்தச் சூழல்களில், மக்களவை உறுப்பினர் எண்ணிக்கையினை மிகுவித்து, அதன் வழியாக அரசமைப்புச் சட்டத் திருத்தம் போன்றவற்றை எளிதில் நிறைவேற்றி, ஒற்றையாட்சிக்கு வழி வகுத்துவிடலாம் எனப் பா.ச.க. கனவு காண்கிறது.

தான் கூறவேண்டிய கருத்துக்களைத் தனது கூட்டணிக் கட்சித் தலைவர் வழியாக முன்னெடுக்க முனைகிறது.

135 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட இந்திய ஒன்றியத்தில் 543 நாடாளுமன்ற உறுப்பினர்தாம் என்பது சார்பு நிலையிலும் ஒப்பீட்டளவிலும் பார்க்கும்போது குறைவாகத் தெரியலாம். பெருமளவிலான மக்களுக்கு இவர்கள் பணியாற்றுவதில் தடைகள் இருப்பது போலவும் தோன்றலாம்.

ஆனால், இந்திய ஒன்றியத்தின் ஆட்சியமைப்பு முறையினை முற்றிலும் புறக்கணித்துவிடக்கூடாது. மக்களுக்குப் பணியாற்றச் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளனர். மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் எனப் பல நிலைகளில், பல கட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மக்களது நலன்களைப் பேணுகின்ற வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

ஒன்றிய அரசின் பெரும்பாலான திட்டங்கள் மாநில அரசுகளின் வழியாகவே செயல்படுத்தப்படுவதால், மக்களவை உறுப்பினர்களைவிட மாநிலச் சட்டப்பேரவை உறுப்பினர்களும் பிறரும் மக்களுக்கு நெருக்கமாகப் பார்க்கப்படுகின்றனர்.

மக்களவை உறுப்பினர்களின் பங்களிப்பு ரயில்வே போன்ற சில துறைகளில் சிறப்புப் பெற்றிருப்பதை மறுத்துவிட முடியாதுதான். ஆனாலும், மாநிலத்துக்கான ஒன்றிய அரசின் திட்டங்களை மாநில அரசுதான் போராடிப் பெறவேண்டிய நிலை உள்ளது என்பதையும் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. மக்களவை எண்ணிக்கை கூடுவது மட்டுமே சிக்கல்களைத் தீர்த்துவிடப்போவதில்லை.

மாநில அரசுகளுக்கு மேலும் உரிமைகளும் கடமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற இயல்பான எதிர்பார்ப்புகளையும் இங்குக் கணக்கில் கொள்ளவேண்டும்.

இந்தியா என்பது பல இன மக்களைத் தமக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் மாநிலங்களின் ஒன்றியம் என்பதை மறந்துவிடக்கூடாது. மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், இயல்புகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் எனப் பலவற்றிலும் வேறுபட்ட மனநிலையில் உள்ள தேசிய இனங்கள் இடம்பெற்றுள்ள மாநிலங்களின் ஒன்றியம் இது.

இங்கு ஒன்று அல்லது ஒரு சில மாநிலங்களின் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையினை வைத்துக்கொண்டு, பெரும்பான்மை என்ற பெயரில் மற்ற மாநில இன மக்களைக் கட்டுப்படுத்துவதோ, அடக்கிவைப்பதோ, கீழ்மைப்படுத்துவதோ, அடிமைப்படுத்தோ நிகழ்ந்துவிடக்கூடாது என்பதைத்தான் அடிப்படையாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

### தமிழகத்தின் இடங்கள் 1967இல் குறைந்தன

1962 தேர்தலில் தமிழ்நாட்டுக்கு 41 மக்களவை உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், 1967இல் இது 39ஆகக் குறைந்துவிட்டது. அப்போது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதை எடுத்துக்காட்டிப் பரப்புரை செய்தனர் என்றாலும், அன்றைய காங்கிரசார் கண்மூடிக் கிடந்தனர். இந்த நிலை தொடர்ந்தால், தமிழகத்துக்கான எண்ணிக்கை மேலும் குறைந்துவிடும்.

இந்த நிலைமைகளில், இப்போதைக்கு இன்றைய மக்களவை எண்ணிக்கை நீடிப்பதுதான் உடனடித் தீர்வாகத் தெரிகிறது.

ஆயினும், இந்திய ஒன்றியத்தில் மக்களவை என்ற அமைப்பு குறித்து மேலும் ஆழ்ந்து ஆய்வு செய்யவேண்டும்.

இந்தியா விடுதலை அடைந்த நாளில் அல்லது 1951ஆம் ஆண்டின் மக்கள் தொகை எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுசீரமைப்புச் செய்வது பொருத்தமாக இருக்கலாம்.

இந்திய ஒன்றியத்தில் மாநில இன மக்களை இணைத்தபோது, அவர்களின் ஒப்புதல் பெறப்படவில்லை. அத்துடன், அன்றிருந்த மாநிலச் சட்டப்பேரவைகளின் ஒப்புதலையும் பெறவில்லை.

அப்போது இந்திய மாநிலங்கள் மொழிவழி மாநிலங்களாக இல்லாதிருந்தபோதிலும், இந்திய ஒன்றியத்தில் அவை இணைக்கப்பட்டதால், அந்தக் காலகட்டத்தின் மக்கள் தொகையினைக் கணக்கில் கொள்வது பொருத்தமாக அமையலாம்.

தொடர்புக்கு : 9444075561

## அமெரிக்க எடுத்துக்காட்டு

இத்தகையதொரு சிக்கல் அமெரிக்க நாட்டிலும் எழுந்தது. பல சிறு மாநிலங்கள், தாங்கள் பெரிய மாநிலங்களின் ஆளுகையில் அடிமைப்பட்டுவிடுவோம் என அஞ்சின.

அதனால்தான், சார்பாளர் அவை எனப்படும் கீழவை மக்கள் தொகை அடிப்படையில் அமைக்கப்பட்டது. மாநிலங்கள் அனைத்துக்கும் இணையாக இரண்டு உறுப்பினர்கள் எனக் கொண்ட செனட் எனப்படும் மேலவையும் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய 4 கோடி மக்களைக் கொண்ட கலிபோர்னியா மாநிலத்துக்கும், 6 லட்சம் மக்கள் மட்டுமே இருக்கும் வொய்மிங் மாநிலத்துக்கும் இரண்டு இரண்டு உறுப்பினர்கள்தாம் செனட் அவையில் இருக்கின்றனர்.

ஆனால், இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப மாறுபடுகிறது. உ.பி.க்கு 31, தமிழ்நாட்டுக்கு 18, மணிப்பூர் போன்ற சிறு மாநிலங்களுக்கு ஒன்று என வேறுபடுகிறது. மாநிலங்கள் அனைத்துக்கும் இணையான எண்ணிக்கை கொண்டிருந்தால் இந்திய ஒன்றியம் என்பதன் பொருத்தப்பாடு நிலைபெறும்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும், ஒரு சில மாநிலங்களின் கட்டுக்குள் சென்றுவிடுவதை ஏற்க இயலாது.

# விண்வெளி சாதனை படைத்த விஞ்ஞானிகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துகள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது :

விண்வெளி ஆய்வில் 41 ஆண்டுக்குப் பிறகு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் புதிய மைல் கல் பதித்துள்ளது. நீண்ட பல பத்தாண்டுகளாக நடந்து வரும் விண்வெளி ஆராய்ச்சியில், சோவியத் சோசலிச ஒன்றியத்தின் ஆதரவுடன் இந்திய விண்வெளி வீரர்கள் ராகேஷ் சர்மா, ரவீஸ் மல்ஹோத்ரா ஆகியோர் விண்வெளியில் 1984 ஏப்ரல் மாதம் பயணித்து சாதனை படைத்தனர். இதில் ராகேஷ் சர்மா, விண் வெளியில் ஏழு நாட்கள் 21 மணி, 40 நிமிடம் இருந்து சாதனை படைத்து பூமிக்குத் திரும்பினார்.

இதனைத் தொடர்ந்தும் விண்வெளி ஆய்வில் புதுப்புது சாதனைகளைப் படைத்து வந்தாலும், 41 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளி வீரர் சுபான்சு சுக்லா, அமெரிக்காவின் புளோரிடா விண்வெளி ஏவு தளத்தில் இருந்து, பால்கன் 9 ராக்கெட் மூலம் அமெரிக்கா, ஹங்கேரி மற்றும் போலந்து நாட்டு ஆராய்ச்சியாளர்களுடன் 25.06.2025 அன்று பயணம் சென்றுள்ளார். இவர்கள் ஆக்சியம் 4 என்கிற ஆய்வுக் கலத்தின் மூலம் 26.06.2025 அன்று மாலை 4.30 மணிக்கு சர்வ தேச விண்வெளி ஆய்வு மையத்தை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு, சுபான்சு சுக்லா "பயிர்களை விளைவித்தல்" உள்ளிட்ட ஏழு பிரிவு ஆய்வுகளை மேற்கொள்வார் என்ற தகவல் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைமை, தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியின் பொறுப்பில் இருந்து வரும் காலத்தில், அமைந்துள்ள இந்தச் சாதனைப் பயணம் ஆய்வுத் தளத்தில் சிகரம் தாண்டிச் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

விண்வெளி ஆய்வு வரலாற்றில் புதிய மைல்கல் பதித்துள்ள இஸ்ரோ இயக்குநர் உள்ளிட்ட விஞ்ஞானிகள், பயிற்றுநர்கள் உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### காசாவில் நடைபெறும் தாக்குதலுக்கு எதிராக

# இடதுசாரிக் கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம்




காசாவில் நடைபெற்று வரும் ராணுவத் தாக்குதலுக்கு எதிராகவும், ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து நடத்திய வல்லாதிக்கத் தாக்குதலுக்கு எதிராகவும் 27.06.2025 அன்று கோவை டாட்டா பாத் பகுதியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்குப் பகுதிச் செயலாளர் தெய்வேந்திரன் தலைமையில், இடதுசாரிக் கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் இந்தியக் கலாச்சார நட்புறவுக் கழகத்தின் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் கண்டன உரை ஆற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர் துவக்கி வைத்தார். கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.பத்மநாபன், கனகராஜ், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேசன் கட்சியின் செயலாளர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழையும், தமிழர்களையும் வஞ்சிக்கும் பாஜகவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பாஜக அரசு, அதிகாரத்தில் அமர்ந்த ஆரம்ப நாளிலிருந்து இந்தி, சமஸ்கிருத மொழிகளைத் தமிழ்நாட்டில் திணிக்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் வெளியான தகவலின்படி 2014 முதல் 2024 வரையான பத்தாண்டுக் காலத்தில் வழக்கொழிந்து வரும் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காக 2,532 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது.

அதேசமயம் தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஒரியா ஆகிய ஐந்து மொழிகளுக்குமாக, சேர்த்து ஒட்டு மொத்தமாக ரூ.147.56 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. சமஸ்கிருதத்தை விட 17 மடங்கு குறைவாகவே தென்னிந்திய மொழிகளுக்கு நிதி ஒதுக்கி

உள்ளது. இதில் தமிழ் மிகவும் வஞ்சிக்கப்பட்டுள்ளது.

இத்துடன், புதிய கல்விக் கொள்கை, பிரதமர் கல்வித் திட்டம் ஆகிய பெயர்களில் இந்தி மொழி பாட மொழியாகச் சேர்க்கப்பட்டு, கற்பிக்க முன்வந்தால் மட்டுமே, பள்ளிக் கல்வித்துறைக்கு நிதி ஒதுக்க முடியும் என நிபந்தனை விதித்து நிதி ஒதுக்க மறுத்து வருகிறது.

கீழடித் தொல்லியல் ஆய்வில் கண்டறிந்த பழம் பொருட்கள், தமிழர்களின் நகர நாகரீக வாழ்வு, கி.மு.ஆறாம் நூற்றாண்டுக்கும் முந்தைய, தொன்மை கொண்டது என்பதை ஏற்க மறுத்து, தொல்லியல் ஆய்வுக்குப் பொறுப்பேற்றுச் செயல்பட்ட இயக்குநர் அமர்நாத் இராமகிருஷ்ணாவை இடம்மாற்றம் செய்து வஞ்சித்துள்ளது.

இயற்கைப் பேரிடரைத் தொடர்ந்து சந்தித்து, ஏறத்தாழ ரூ.50 ஆயிரம் கோடி மதிப்பு இழப்புகளைச் சீரமைக்க, மறு வாழ்வை உறுதி செய்ய, தேசியப் பேரிடர் நிதி கேட்ட தமிழ்நாடு அரசின் முறையீட்டுக்கு மதிப்பளித்து நிதி ஒதுக்கவில்லை.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்படும் நிதியை ஆண்டுக்கு, ஆண்டு வெட்டிக் குறைத்தும், வழங்கப்படும் மனித வேலை நாட்களை 50 சதவீதம் குறைத்தும் ஊரக உடல் உழைப்புத் தொழிலாளர்களை வஞ்சித்து வருகின்றது.

தமிழர்களையும், தமிழ்நாட்டையும் தொடர்ந்து புறக்கணித்தும், வஞ்சித்தும் வரும் பாஜக ஒன்றிய அரசின், மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து அனைத்துத் தரப்பு மக்களும் போராடி வருகின்றனர். மாநில உரிமைகளுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் போராடி வரும் பொதுமக்களின் கவனத்தை, மதரீதியாக, திசை திருப்பி தேர்தல் ஆதாயம் தேடும் பாஜகவின் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# துணைச் சுகாதார நிலையங்களைத் தனியார் மையங்களாக மாற்றக் கூடாது

### சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் எதிர்ப்பு



சென்னையில் ஊடகவியலாளர் சந்திப்பில், சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கூறியதாவது.

குடும்பநலத்திட்டங்களை நடைமுறைப்படுத்திய துணை சுகாதார நிலையங்களை, சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்களாக மாற்றி, தனியார் மூலம் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கும் மையங்களாக ஒன்றிய அரசு மாற்றி வருகிறது. தடுப்பூசிகள் வழங்குவதையும் தனியார் மயமாக்கி வருகிறது. தமிழ்நாடு அரசும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தைத் தனியார் மயமாக்கி வருகிறது.

இதன் காரணமாக, இது கிராமப்புற செவிலியர்களின் பணிப் பறிப்பு மட்டுமல்ல, இது தடுப்பூசிகளை இலவசமாக உரிய நேரத்தில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பெறும் உரிமைகளுக்கே எதிரானதாகும். இது ஏழை எளிய மக்களுக்குத் தடுப்பூசி கிட்டாமல் செய்துவிடும். எனவே, தமிழ்நாடு அரசு இந்நடவடிக்கையைக் கைவிட்டு, கிராமப்புற சுகாதார செவிலியர்கள் மூலம் தடுப்பூசிகளை வழங்குவதைத் தொடர வேண்டும்.

8488 துணை சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற சுகாதார செவிலியர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

மருத்துவ பணி ஆணையம் மூலம் கிராமப்புற துணை செவிலியர் பணி யிடங்களை நிரப்புவதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பு குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இதனால் இப்பணி யிடங்களை நிரப்புவதில் காலதாமதம் ஏற்படுகிறது. மாநில அரசே முன்னின்று, தலையிட்டுச் சுமூகமான தீர்வு கண்டு 4000 க்கும் மேற்பட்ட சுகாதார செவிலியர்களின் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் ஏற்கெனவே, சமூக நலத்துறையிடம் இருந்தது. அதை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் செயல்படுத்தும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. முத்துலட்சுமி ரெட்டி திட்டப் பணிக்கே, சுகாதார செவி லியர்கள் தங்களது பணி நேரத்தில் 80 விழுக்காடு நேரத்தைச் செலவிட வேண்டி உள்ளது. கிராமப்புற செவிலியர்களின் முதன்மைப் பணிகளான, தாய்சேய் நலப்பணிகள் மற்றும் தடுப்பூசி வழங்கும் பணிகள் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. இதனால், மகப்பேறு மரணம், சிசு மரணம் அதிகரிக்கும் ஆபத்து உள்ளது.

தமிழக அரசு 05.01.2000 அன்று சுகாதார செவிலியர்களுக்குப் பதவி உயர்வு வழங்க உயர்மட்டக் குழு அமைத்து அரசாணை எண் 17 வெளியிட்டு, 16.03.2022ல் சங்கத்துடன் விவாதித்து அறிக்கை பெற்றது. பலநோக்குச் சுகாதாரத் திட்டத்தில் பதவி உயர்வில் ஆண், பெண் பாலினப் பாகுபாடு தொடர்ந்து நிலவுகிறது. அதனை களையவேண்டுமெனத் தொடர்ந்து கோரிக்கை வைத்தும் தீர்வு எட்டப்படவில்லை. ஆண் சுகாதார ஆய்வாளர்கள் பணியில் சேர்ந்த 5 ஆண்டுகளில் கிரேடு 1 பதவி உயர்வு வழங்குவது போல், பெண் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு மேம்படுத்தப்பட்ட முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மூன்று கிழிவி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒருவர் என்ற கணக்கில், தாய்மை நலத்துணை செவிலியர் இருக்க வேண்டும். ஆனால், நூற்றுக்கணக்கான ஆரம்ப சுகாதார நிலையங்களில், கிழிவி இல்லாததனால் பணிச்சுமை அதிகரித்து வருகிறது.

அகில இந்திய அளவில் நிலவும் தடுப்பூசிகள் தட்டுப்பாட்டைப் போக்கிட, கடும் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்திடப் பொதுத்துறை நிறு வனங்கள் மூலம் தடுப்பூசிகளை உற்பத்தி செய்திட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, கோரிக்கை அட்டைகள் அணிந்து பணிக்குச் செல்லும் போராட்டம், 23.06.2025 முதல் 02.07.2025 வரை நடத்தப்படும். 10.07.2025 அன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். 24.07.2025 அன்று சென்னையில் உண்ணாநிலை அறப்போராட்டம் நடைபெறும்.

ஊடகவியலாளர் சந்திப்பில் இராம.இந்திரா, தலைவர் இ.விஷாலாட்சி, பொதுச்செயலாளர் பு.சத்தியா, பொருளாளர் பி.பாத்திமா மேரி, தமிழ்நாடு மருத்துவத்துறைப் பணியாளர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ரயில் கட்டண உயர்வைத் திரும்பப் பெற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்





ஒன்றிய அரசு அறிவித்துள்ள ரயில் கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

பாஜக ஒன்றிய அரசு அறி வித்த ரயில் கட்டண உயர்வு ஏழை மக்களை, குறிப்பாக அடித்தட்டு மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதை ஆதாரப்பூர்வமாக எடுத்துக் கூறி, அதனைத் திரும்பப் பெற வேண்டும் என, எதிர்க்கட்சிகள், ரயில் பயணிகள் சேவை அமைப்புகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வந்த நிலையில், ஒன்றிய அரசு எந்தவித மாறுதலும் இல்லாமல் இன்று முதல் 01.07.2025 ரயில் கட்டண உயர்வை அமலாக்கியுள்ளது. கட்டண உயர்வை ரூபாய் கணக்கில் கூறாமல் பைசா கணக்கில் கூறியிருப்பது பொதுமக்களை ஏமாற்றும் வஞ்சகமாகும்.

நாள்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் என்ற முறையில், ஆண்டுக்கு 400 கோடி பேர் பயணிக்கும் ரயில் பயணம் எத்தனை கோடி கிலோ மீட்டராக இருக்கும் என்பதைக் கணக்கிட முடியாமல் மறைக்கும் செயலாகும். இது தவிர முன்பதிவு முறையில் தட்கால், பிரிமியம் தட்கால், அதிவிரைவு வண்டி, சிறப்புக் கட்டண சேவை எனப் பல்வேறு வகைகளில் ரயில் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகின்றன. கிலோ மீட்டருக்கு 4 பைசா வரை கட்டண உயர்வு என்பதன் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் கட்டணச் சுமையைப் பயணிகள் தலையில் சுமத்தியிருக்கும் மோடியின் ஒன்றிய அரசின், மக்கள் விரோதக் கொள்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அறிவிக்கப்பட்டு, அமலாக்கத் தொடங்கியுள்ள ரயில் கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நிலத்தடி நீருக்கு வரி விதிப்பு ஒன்றிய நீர்ப்பாசனத் துறை அடாவடி!

## ஆணை நகல் எரிப்புப் போராட்டம்



பி.எஸ்.மாசிலாமணி



**நீர்ப்பாசனத்துறை அமைச்சர் (ஜல் சக்தி துறை) சி.ஆர். பாட்டீல் நிலத்தடி நீர் எடுப்பை முறைப்படுத்துவதற்காக நில நீர் எடுத்துப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு வரி விதிக்கும் ஒரு புதிய திட்டத்தை 27.6.2025 அன்று டெல்லியில் அறி வித்துள்ளார்.**

நிலத்தடி நீர் கட்டுப்பாடற்ற முறையில் எடுத்துப் பயன்படுத்தப்படுகிறது என்பதால் இதை முறைப்படுத்திடும் முறையில் விவசாயிகள் சாகுபடிக்காக வெளியேற்றும் நீரை அளவீடு செய்து விவசாயிகளுக்குத் தண்ட(னை)வரி விதித்திடவும் மாநில அரசுகளோடு இணைந்து இத்திட்டத்தை அமலாக்கிட 1600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை மட்டுமே வைத்து மேலோட்டமாகப் பார்த்தால் உண்மைதானே, இது நியாயம்தானே எனத் தோன்றும்.

வேளாண்மைக்காகச் சில நேரங்களில் கூடுதலாக தண்ணீர் எடுக்கப்படுவது உண்மை. கூடுதலான தண்ணீர் தேவைப்படும் பயிர்கள் என்பது நெல் மற்றும் கரும்புச் சாகுபடிக்கு மட்டுமே. இது எதனால் என்றால் மழை பொழிவு பொய்க்கும் நிலையிலோ அல்லது கோடைக்காலத்தில் மும்முனை மின்சாரம் சீராகக் கிடைக்காத பொழுது கூடுதலாக நிலத்தடி நீரை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்நிலை என்பது சில மாதங்களில் சில நாட்கள் மட்டுமே. கூடுதலான நேரம் மின்மோட்டார்களை அல்லது ஆயில் இன்ஜின்களை இயக்கினால் வீண் செலவு விவசாயிகளுக்குத் தானே எனத் தெரியும்.

இதரப் பயிர்களுக்குக் கூடுதலாக தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்தால் பயிர்கள் அழிந்து விடும் என யாவரும் அறிவர். எனவே வேளாண்மைக்குத் தேவைக்கு மேலே தண்ணீர் எடுப்பது என்பது இல்லை.

இந்நிலையில் நெல், கரும்பு, நஞ்சை புஞ்சைப் பயிர்கள் உள்ளிட்ட வேளாண் உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதால்தான் உணவுத் தேவையில் இந்தியா தன்னிறைவு பெற்று வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யமுடிகிறது. இதனால் அந்நியச் செலாவணி வருவாய் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான நிலையில் நமது நாட்டுக்குக் கிடைத்து வருகிறது.

ஒன்றிய வேளாண் அமைச்சக அறிக்கையின் படி... வரும் கரீப் பருவத்தில்... நெல் சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டு 4 லட்சம் ஹெக்டராக இருந்த நிலையில் 4 லட்சத்து 53 ஆயிரம் ஹெக்டராக விரிவடைகிறது. பருப்பு வகைகள் சாகுபடி 2.60 லட்சத்தில் இருந்து 3.7 லட்சம் ஹெக்டராக அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடி 1.50 லட்சத்திலிருந்து 2.05 லட்சம் ஹெக்டர் ஆக உயர்ந்துள்ளது. நாட்டின் கரீப் பருவச் சாகுபடி மொத்தம் 89 லட்சத்து 29 ஆயிரம் ஹெக்டராக எட்டி உள்ளது என தரக் கட்டுப்பாட்டு நிறுவனமான கிரிசில் ரேட்டிங்ஸ் அறிக்கை கூறுகிறது.

2025–26 பருவத்தில் கரும்பு விளைச்சல் அதிகரித்து, சர்க்கரை உற்பத்தி 3 கோடியே 50 லட்சம் டன்னாக உயரும். எனவே இந்த சீசனில் 40 லட்சம் டன் சர்க்கரை எத்தனால் தயாரிக்க அனுப்பப்படும் என ஒன்றிய அமைச்சகம் கூறியுள்ளது.

நடப்பாண்டு அரிசி உற்பத்தி கூடுதலாகும் நிலையில்தான் சேமிப்பில் இருக்கும் அரிசியை எடுத்து எத்தனால் தயாரிக்க ஒன்றிய அரசு முடிவு எடுத்துள்ளது. எரிவாயு பயன்பாட்டுக்கு எத்தனால் அத்தியாவசிய மாற்றாக உள்ளது. இப்படியான தேவைக்கும் அரிசி, கரும்பு போன்றவற்றின் உற்பத்தி அதிகரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பருவகால நிலை பொய்த்தலில் மழைப் பொழிவு குறைந்தாலும் ஏமாற்றினாலும் வேளாண்மையில் நிலத்தடி நீர் பயன்பாடுதான் உற்பத்தி உயர்வுக்கு அடிப்படையாகும். இதற்கு வரிவிதித்து விவசாயிகளை முடக்குவது என்பது வேளாண் உற்பத்தியில் வீழ்ச்சியைத்தான் ஏற்படுத்தும்.

இந்தச் சூழலில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா ஆகிய அருகாமை மாநிலங்களின் நீர்ப் பங்கீட்டை நம்பியே தமிழகம் உள்ளது. காவேரி, முல்லைப் பெரியாறு, தென்பெண்ணை ஆறு, பாலாறு ஆகிய நதி நீர் நியாயப் பங்கீடு கிடைத்தபாடில்லை. இந்த மாநிலங்களின் வடிகாலாகத்தான் தமிழகம் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்திற்குத் தேவையான நீர்ப் பங்கீடு பாதகமாக உள்ள நிலையிலும் வேளாண்மை உற்பத்தி பெருகி வருவதற்கு அடிப்படை நிலத்தடி நீர் பயன்பாடாகும். நிலத்தடி நீரை மேம்படுத்திச் சேமித்திட வேண்டும் என்ற அக்கறை விவசாயிகளுக்கும் இருக்கிறது. ஏனெனில் அந்த நீரை நம்பித்தான் விவசாயிகள் உள்ளனர் என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும்.

பல ஆயிரக்கணக்கான குடிநீர் சுத்திகரிப்பு வினியோக நிறுவனங்கள் தினசரி பல்லாயிரம்கோடி லிட்டர் நிலத்தடி நீரை எடுக்கிறார்களே. அதற்கெல்லாம் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அனுமதி பெற்ற சில நிறுவனங்களும் கூட அனுமதிக்கு மேலாக பல மடங்கு தண்ணீர்த் திருட்டு செய்கிறார்களே. அதன் மீது ஒன்றிய அரசு கவனம் செலுத்தலாமே.

பல்லாயிரம் அடிகளுக்கும் கீழே பூமியில் துளை போட்டு இயற்கை எரிவாயு மற்றும் குருடாயில் தேவைக்கு எடுக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்தாலும் நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்தில் சென்று கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் அறிய முடியும். இதனால் குடிநீர்த் தட்டுப்பாடு மட்டுமல்ல தரமற்ற குடிநீராக மனித உடல் நலிவுக்குக் காரணமான நீராக இது மாறி வருகிறது என்ற ஆபத்தை அறிய முடிகிறது.

நிலத்தடி நீரைச் சேமித்திடும் அக்கறை அரசுக்கு உண்மையாகவே இருந்தால் இருக்கும் நீர்நிலைகளைத் தூர்வாரிட மழைநீர் சேமிப்புக் கட்டமைப்புகளை முறையாக ஏற்படுத்திட ஒவ்வொரு ஆண்டும் கடலுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான டி.எம்.சி நீரைச் சேமித்திடும் நீர் சேமிக்கும் கலன்களை உருவாக்கிடப் பெருந்திட்டம் வகுத்திட வேண்டுமே தவிர விவசாயிகளுக்கு எதிரான நிலையில் சிந்திக்கக் கூடாது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் போது, தமிழகத்தின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, தேனி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் பாதிப்புகளை நேரில் கண்டேன். பல்லாண்டுகளுக்கு முன்வரை பயன்பாட்டில் இருந்த நீர் இருப்பு நிலைகள் கவனிப்பாரின்றித் தூர்ந்து போனதால் மழைவெள்ள நீர் இதன்இருப்பில் கொள்ள இயலாமல் வேளாண்மை உற்பத்தி வயல்களில், குடியிருப்புகளில் புகுந்து வாழ்வுநிலைகளை நாசப்படுத்தியது. இதன் பின்னும்கூட இவைகளைப் பாதுகாத்திடும் திட்டம் இதுவரை இல்லை. அத்தியாவசியத் தேவைகளுக்கு நீர் எடுப்பதைத் தடுப்பதைக் கைவிட்டு நீர் சேமிப்புக் கலன்களை அதற்கான திட்டங்களை வகுத்திட உரிய அளவு நிதியை ஒதுக்கீடு செய்து பணிகளைத் திட்டமிட வேண்டும். இதை விடுத்து விவசாயிகளையே குறிவைத்துத் தாக்கிடும் செயலை ஒன்றிய அமைச்சர் கைவிட வேண்டும். இந்த அறிவிப்பு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

துப்பாக்கி குண்டுகளுக்குப் பலி, போராட்டங்களில் உயிர் நீத்தல் என்ற விவசாயிகளின் நீண்ட நெடிய துயரப் போராட்டங்களுக்குப் பின்தான் தமிழ்நாட்டில் கட்டணமில்லா வேளாண் ஊக்க மின்சாரம் அமல்படுத்தப்படுகிறது.

மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று, யானை கட்டி போரடித்த நாடு எங்கள் சோழவள நாடு. இந்த இறுமாப்பு டெல்டாவில் இப்போது தளர்ந்து விட்டது. எடுக்கப்படும் நிலத்தடி நீரும், கொடுக்கப்படும் மின்சாரமும் பிற மாவட்டங்களின் வேளாண் விளைச்சல் உயர்விற்கு அடிப்படை ஆகியுள்ளது.

ஆகவே ஒன்றிய அரசு உடனடியாக இந்தத் திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும். இதைத் தமிழ்நாட்டில் அமல்படுத்த மாட்டோம் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி உடனடியாகச் சங்கத்தின் சார்பில் செய்திகள் கொடுக்கப்பட்டன.

சங்க மாநிலத் தலைமை அறி வித்தபடி மறுநாள் 28 ஆம் தேதி மாவட்ட தலைநகரங்களில் ஒன்றிய அரசின் நீராதாரத்துறை ஆணையின் நகலைத் தீயிட்டு எரிக்கும் போராட்டம் நடத்தப்பட்டது. உடனடியாக அறிவித்தாலும் மிக எழுச்சியாக நடந்தது.

அறிவித்த மறுநாளே தமிழகத்தின் முதல் போராட்டமாக நமது தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் போராட்டம் அமைந்தது.

## நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் ஒன்றிய அரசின் அரசாணை நகல் எரிப்புப் போராட்டம்



கோவில்பட்டி



மயிலாடுதுறை

விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு, வரி விதிக்கும் ஒன்றிய மோடி அரசின் அறிவிப்பைக் கண்டித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

**கோவில்பட்டி** கோவில்பட்டி பயணியர் விடுதி முன்பு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் லெனின் குமார் தலைமையில் நகல் எரிக்கும் போராட்டம் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.கரும்பன், விவசாயச் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் வி.பாலமுருகன், தமிழ்நாடு விவசாயச் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் முரளிதரன், குருசாமி, ரவீந்திரன், கட்சியின் நகரச் செயலாளர் கே.செந்தில் ஆறுமுகம், வேலாயுதம், வேலுச்சாமி, எட்டப்பன், பிச்சை மற்றும் நகரத் துணைச் செயலாளர் அலாவுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை தெற்கு:** தஞ்சை தெற்கு மாவட்டத்தில் சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் சோ.பாஸ்கர் தலைமையில், பழைய பேருந்து நிலையம் அருகில் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாநிலக் குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம், மாவட்டத் துணைத் தலைவர் அ.கலியபெருமாள், சீனி.முருகையன், வீர மோகன், அ.அய்யாக்கண்ணு, ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டத்தில், சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகில் விவசாயிகள் சங்கம் மாவட்டச் செயலாளர் கே.எஸ்.சிவராமன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, வி.ச மாவட்ட தலைவர் பெ.வீரராஜ், சீர்காழி ஒன்றியச் செயலாளர் கி.வரதராஜன், கட்சியின் கொள்ளிடம் ஒன்றியச் செயலாளர், சீர்காழி ஒன்றியச் செயலாளர் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

மறைமலை நகர்

## செக்பாயிண்ட் நிறுவனம் – ஏஐடியுசி பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம்



மறைமலை நகர் செக்பாயிண்ட் நிறுவனத்திற்கும், ஏஐடியுசி தொழிற்சங்கத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில், மூன்று ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வு மற்றும் இதரச் சலுகைகள் உள்ளடக்கிய 12(3) ஒப்பந்தம் 18.06.2025 அன்று, இருங்காட்டுக் கோட்டை தொழிலாளர் துணை ஆணையர் எம்.கமலக்கண்ணன் முன்பு கையெழுத்திடப்பட்டது. 01.04.2024 முதல் 3 ஆண்டுகளுக்கான ஒப்பந்தத்தில் நிர்வாகத் தரப்பில் டைரக்டர் நிர்மலா மற்றும் மனிதவள மேலாளர் சுப்பிரமணியம், தொழிற்சங்கம் சார்பில் தலைவர் கே.இரவி, மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர், செயலாளர் வி.உமாபதி, துணைத்தலைவர் எம்.கோட்டியப்பன், பொருளாளர் எஸ்.ராஜா, துணைச் செயலாளர் ஏ.அருண்குமார், துணைப் பொருளாளர் எஸ்.முரளி ஆகியோர் கையெழுத்திட்டனர். தொழிலாளர்களின் தொடர் போராட்டத்தின் மூலம் தீர்வு காணப்பட்டது.

கோயமுத்தூர் மாநகராட்சியின்

## வரி உயர்வைக் கைவிட வலியுறுத்தி சிபிஐ ஆர்ப்பாட்டம்



கோயமுத்தூர் மாநகராட்சி சொத்துவரி, குப்பைவரி, குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றை ஆண்டுக்கு ஆறு சதம் உயர்த்துவது என முடிவு செய்துள்ளது. அபராத வரியும் விதித்து வருகிறது. இவற்றைத் திரும்பப் பெற வேண்டும், குண்டும், குழியுமாக உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டும். பாதாளச் சாக்கடைக்காகவும் சூயஸ், அம்ருத் குடிநீர்த் திட்டங்களுக்காகவும் தோண்டப்பட்ட குழிகளை உடனடியாக மூட வேண்டும், மாநகரப் பகுதிகளில் பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலைகளைப் புதுப்பிக்க வேண்டும். என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 25.06.2025 அன்று, கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மௌ.குணசேகர், மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன், மல்லிகா புருஷோத்தமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் மாநகராட்சி துணை ஆணையர் குமரேசன் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

## ஒத்தக்கடை பகுதி இளைஞர்களுக்குக் கட்சி சார்பில் கேரம் போர்டு அன்பளிப்பு



மதுரை புறநகர் மாவட்டக் குழு கூட்டம் மெய்யர் தலைமையில் நடைபெற்றது. இதில் தேசியக்குழு உறுப்பினர் டி.ராமசாமி கலந்து கொண்டு வழிநடத்தினார். அப்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மதுரை புறநகர் சார்பாக, கட்சியின் ஒன்றியக் குழு திருப்பதிராஜா நரசிங்கம் ஒத்தக்கடை பகுதி தோழர்களுக்கு கேரம் போர்டு வாங்கிக் கொடுத்தார்.

## கலை இலக்கியப் பெருமன்ற சிவகாசி மாநகரச் செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகாசி மாநகரச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட கவுரவத் தலைவர் கந்தகப் பூக்கள் ஸ்ரீபதி கூட்டத்திற்குத் தலைமையேற்றார். சிவகாசி மாநகரச் செயலாளர் முத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சிவகாசி கிளையின் வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டுப் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வரவு செலவு விவரங்களை கிளைத் துணைச் செயலாளர் ஆதிஸ்வரன் சமர்ப்பித்தார். முனைவர் பொ.நா.கமலா வாழ்த்துரை வழங்கினார். முடிவில் கிளைத் துணைத் தலைவர் ஆசிரியர் பெ.ஜெயக்குமார் நன்றியுரை வழங்கினார்.

## அதவத்தூர் அன்னக்கிளியின் கணவர் இயற்கை எய்தினார்

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி உள்ளாட்சிக் கிளையின் மூத்த உறுப்பினர் அதவத்தூர் அன்னக்கிளி அவர்களின் கணவர் இயற்கை எய்திவிட்டார். அவருக்கு உள்ளாட்சிச் செயலாளர் ஜெ.நதியா, ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன், ஒன்றிய துணைச் செயலாளர் எம்.மருதாம்பாள், மாதர் சங்க ஒன்றியப் பொருளாளர் எம்.ரஜியாபேகம், கட்டடச் சங்க தேசியக் குழு டி. நிர்மலா உள்ளிட்டோர் கலந்து கொண்டு அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்தினர்.

## ஏஐடியூசி உள்ளாட்சிப் பணியாளர் சம்மேளன ஆலோசனைக் கூட்டம்



தருமபுரி மாவட்ட முனிசிபல் பஞ்சாயத்துப் பொதுப் பணியாளர்கள் சங்க மாவட்ட ஆலோசனைக் கூட்டம், தருமபுரியில் மாவட்ட தலைவர் என்.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

ஊரக உள்ளாட்சிப் பணியாளர் சங்க மாநிலப் பொருளாளர் இராஜேந்திரன், ஏஐடியூசி மாநிலத் துணைத் தலைவர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகள் குறித்துப் பேசினர்.

இதில் ஜூலை 9ம் தேதி அனைத்துத் தொழிற்சங்கம் சார்பில் நடைபெறும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் உள்ளாட்சிப் பணியாளர் சங்கம் சார்பில் பெரும் திரளாகப் பங்கேற்பது எனவும், உள்ளாட்சிப் பணியாளர்களுக்குக் கொரோனா ஊக்கத் தொகை, காப்பீடு, ஊதிய உயர்வு மற்றும் காலமுறை ஊதியம், ஓய்வூதியம், பணிக்கொடை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 22ம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் காத்திருப்புப் போராட்டம் நடைபெற உள்ளது. தருமபுரியில் நடக்கும் போராட்டத்தில் பெரும் திரளாகப் பங்கு பெறுவது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் தமிழ்வாணன், ஆஷா பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மேனகா, பள்ளிக்கல்வி தூய்மைப் பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் செல்வி, கலைவாணி, சக்தி, ராஜேஸ்வரி, செந்தாமரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வீரபாண்டி ஒன்றியத்தில் செந்தொண்டர் பயிற்சி வகுப்பு



இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் பனைமரத்துப்பட்டி, வீரபாண்டி ஒன்றியக் குழு சார்பில், செந்தொண்டர் பயிற்சி வகுப்பு 28, 29 தேதிகளில் காட்டூர்ப் பகுதியில் நடைபெற்றது. பன்னீர்செல்வம், மகேந்திரன் ஆகியோர் பயிற்சி வழங்கினர். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு.கண்ணகி செங்கொடியை ஏற்றி வைத்தார். ஒன்றியம் முழுவதிலும் இருந்து 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமையா, மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஏ.கந்தன், எம்.ராமன், வரவேற்புக் குழு பொருளாளர் பழ.ஜீவானந்தம், மாநிலக் குழு உறுப்பினர் பா.தினேஷ், ஒன்றியச் செயலாளர் எம்.பாலன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இரா.ரமேஷ், என்.கே.செல்வராஜ், எஸ்.பாலன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் சி.கிருஷ்ணன், பா.நேதாஜி, எம்.சின்னசாமி, கே.பி.வி.ராஜேஷ், ஜி.வெற்றிவேல், ஆர்.மோகனரங்கன் மற்றும் நாமக்கல் தருமபுரி தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பணி நிறைவுப் பாராட்டு விழா மற்றும் ஜனசக்தி வளர்ச்சி நிதி



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மதுரை மண்டல ஏஐடியுசி சங்கத்தின் செயலாளர்கள் சி.எம்.ஜெ.ஜெயபால், எஸ்.நாகராஜ் ஆகியோரது பணி நிறைவுப் பாராட்டு விழா சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.நந்தாசிங் தலைமையில் நடைபெற்றது. பணி நிறைவு பெற்ற தோழர்களைப் பாராட்டி தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியுசி சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஆர்.ஆறுமுகம், திண்டுக்கல் மண்டல ஏஐடியுசி பொதுச்செயலாளர் பி.பாஸ்கர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்டச் செயலாளர் கே.கே.சாமி, முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் இரா.முருகன், டிடிஎஸ்எப் செயலாளர் சம்பத், சிஐடியு மாவட்டச் செயலாளர் லெனின், என்எப்ஐடபிள்யூ மாவட்டச் செயலாளர் ராஜலட்சுமி உள்ளிட்டோர் பேசினர்.

விழாவின் போது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக சி.எம்.ஜெ.ஜெயபால் ரூ.5000, எஸ்.நாகராஜ் ரூ.2000 மற்றும் தொழிற்சங்கச் செய்தி வளர்ச்சி நிதியாக சி.எம்.ஜெ.ஜெயபால் ரூ.5000 எஸ்.நாகராஜ் ரூ.2000 வழங்கினர். நிதி வழங்கிய தோழர்களுக்கு நன்றி.

**பணி நிறைவுப் பாராட்டு விழா**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் ஏஐடியூசி தருமபுரி மண்டலப் பொருளாளர் இ.கணேசன் பணி நிறைவுப் பாராட்டு விழா, தருமபுரி மாவட்ட ஏஐடியூசி போக்குவரத்துச் சம்மேளனம் சார்பில், மண்டலத் தலைவர் ஜி.பூபேஸ்குப்தா தலைமையில் நடைபெற்றது. மண்டலப் பொதுச் செயலாளர் சி.நாகராசன் வரவேற்றார்.

முன்னாள் மண்டலத் துணைத் தலைவர்கள் நாராயணன், செல்வராஜ், முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலப் பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாநில துணைப் பொதுச் செயலாளர் என்.முருகராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மாநில துணைத் தலைவர்கள் ஆர்.ஜேந்திரன், சீனி.இரவி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் கே.மணி, ஆர்.சுதர்சனன் மற்றும் சிஐடியூ, எல்பிஎப் நிர்வாகிகள் வாழ்த்திப் பேசினார்கள். மண்டல துணைப் பொதுச் செயலாளர் கோவிந்தசாமி நன்றி கூறினார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக் குழு மாநாடுகள்

**காரமடை கிழக்கு ஒன்றியம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரமடை கிழக்கு ஒன்றிய மாநாடு பெத்திக்குட்டையில் கே.வீரன் நினைவு அரங்கத்தில் பி.ஏ.மணி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் ரங்கசாமி ஏற்றி வைத்தார். கட்சியின் கோவை மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். ஒன்றியச் செயலாளர் ஆர்.துரைசாமி வேலை அறிக்கையை முன்வைத்தார். இதில் ஒன்றியச் செயலாளராக ஆர்.துரைசாமி, துணைச் செயலாளராக பி.ஏ.மணி, பொருளாளராக பி.வேலுசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சிறுமுகையில் தனியாக குப்பைக் கிடங்கை ஏற்படுத்த வேண்டும், வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். வனவிலங்குகளிடமிருந்து விவசாயப் பயிர்களைப் பாதுகாத்திட வேண்டும், மோதூரில் சமத்துவ மயானம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பர்கூர் வட்டம்:** கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 25வது மாநாடு ஏ.பரமசிவம் தலைமையில், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் எம்.கே.மாதையன் செங்கொடியேற்றித் துவக்கி வைத்தார். மாநிலக் குழு உறுப்பினர்கள் பி.பழனி, எஸ்.கண்ணு ஆகியோர் அரசியல் விளக்க உரையாற்றினர். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்டக் குழு உறுப்பினர் வி.மோகன் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இதில் வட்டச் செயலாளராக ஏ.பரமசிவம், துணைச் செயலாளராக ஜே.சதீஷ், ஆர்.பூபேஸ், பொருளாளராக என்.வீரபத்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பர்கூர் வட்டத்திற்கு நீதிமன்றம் அமைத்திட வேண்டும், ஜோலார்பேட்டை முதல் பர்கூர் வழியாக கிருஷ்ணகிரி ஓசூர் வரை மின்சார ரயில் சேவை அமைத்திட வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கோவை கிழக்கு 57வது வட்டம்:** கோவை கிழக்கு மண்டலம் 57வது வட்ட மாநாடு, ஒண்டிப்புதூர் கட்சி அலுவலகத்தில் எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மண்டலச் செயலாளர் எஸ்.சண்முகம், மண்டலக் குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ் ஆகியோர் பங்கேற்றனர். இதில் செயலாளராக எஸ்.விஜயகுமார், துணைச் செயலாளராக பி.செந்தில்குமார், பொருளாளராக ஆர்.கருப்பசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தருமபுரி ஏஐடியூசி அரங்கம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட ஏஐடியூசி தொழிற்சங்க அரங்க இடைக் கமிட்டி 4வது மாநாடு தருமபுரியில் எஸ்.மேனகா, ஏ.சி.மணி தலைமையில் நடைபெற்றது. என்.மனோகரன் வரவேற்றார். இடைக்குழுச் செயலாளர் எஸ்.சுதர்சனன் கட்சிக் கொடி ஏற்றினார். துணைச் செயலாளர் சி.நாகராசன் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். இடைக் கமிட்டிச் செயலாளர் கே.மணி வேலை அறிக்கை வைத்துப் பேசினார். கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மூ.வீரபாண்டியன் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.சின்னசாமி, ஏஐஓய்எப் மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். இதில் செயலாளராக என்.மனோகரன், துணைச் செயலாளர்களாக கே.மணி, நாகராசன், பொருளாளராக வணங்காமுடி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

உள்ளாட்சி, ஆஷா பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் வழங்க வேண்டும். தருமபுரி சிப்காட் பணியை விரைவாகத் தொடங்க வேண்டும். பொம்மிடிகோம்பேரி இணைப்புச் சாலைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணியை விரைவாகத் தொடங்க வேண்டும். கிடப்பில் உள்ள அரூர், பென்னாகரம் சிட்கோ தொழிற்பேட்டை தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
















இதில் செயலாளராக என்.மனோகரன், துணைச் செயலாளர்களாக கே.மணி, நாகராசன், பொருளாளராக வணங்காமுடி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருவாரூர் ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா, திருவாரூர் ஒன்றியம் 31வது மாநாடு திருநெய்ப்பேர் எஸ்.பாஸ்கரன் நினைவரங்கில் கே.புலிகேசி, டி.அருட்செல்வி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஏற்றிவைத்தார். தமிழ்நாடு விவசாயச் சங்க மாநிலச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி மாநாட்டு துவக்க உரை ஆற்றினார். தியாகிகள் நினைவு ஸ்தூபிக்கு விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் மாலை அணிவித்து மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.ஆர்.ஜோசப், சி.பி.முருகானந்தம் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள்.

இதில் ஒன்றியச் செயலாளராக எம்.நாகராஜன், துணைச் செயலாளராக கே.வீரபாண்டியன், பொருளாளராக ஆர்.சாமிநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

திருவாரூரில் வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கிட வேண்டும். தற்காலிக நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில், நிரந்தரக் கட்டிடம் சிமெண்ட் தளம் அமைத்திட வேண்டும். பழவனக்குடி பாசன வாய்க்கால் தலைப்பு மாற்றி அமைத்திட வேண்டும். பழுதடைந்துள்ள அனைத்துக் கிராமப்புறச் சாலைகள் சீர்செய்திட வேண்டும். தனியார் நிறுவனம் மூலம் வழங்கிய நுண்கடனுக்காக, கடன் வாங்கிய குழுப் பெண்கள் மீது தாக்குதலும், நெருக்கடி செய்யும் குழு ஊழியர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கீழையூர் ஒன்றியம்:** கீழையூர் ஒன்றிய 25வது மாநாடு திருப்பூண்டியில் நடைபெற்றது. முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.மல்லிகா தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மாவட்டத் துணைச் செயலாளர் கே.பாஸ்கர் ஏற்றினார்.

தியாகிகள் ஸ்தூபியைக் கட்சியின் மூத்த தலைவர் எம்.சம்மந்தம் திறந்து வைத்தார். ஒன்றியச் செயலாளர் எஸ்.காந்தி வேலை அறிக்கை வாசித்தார்.

மாநாட்டைக் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஜி.பாண்டியன் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். தமிழ்நாடு விவசாயச் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் வீ.சரபோஜி, மாவட்டத் தலைவர் ஆர்.கே. பாபுஜி, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் எம்.கே.நாகராஜன், மாதர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.மேகலா, ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் வீ.எம்.மகேந்திரன், மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம், மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன் ஆகியோர் பேசினர்.

இதில் ஒன்றியச் செயலாளராக வீ.எஸ். மாசேத்துங், துணைச் செயலாளராக ஜி.சங்கர், பொருளாளராக எம்.பரணபாஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டம் முழுவதும் 100 நாள் வேலைத் திட்டத்தைத் துவங்க வலியுறுத்தி, ஜூலை 23 ஆம் தேதி, 27 ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு காத்திருப்புப் போராட்டம் நடத்துவது எனவும், தமிழ்நாடு அரசு ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்பட்டு, விவசாயிகளும் மேட்டூர் அணையை நம்பி குருவை சாகுபடிக்கான நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். மழையும் இல்லை, தண்ணீரும் முறையாக வந்து சேராததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக வெள்ளையாற்றுப் பாசனத்திற்குக் கூடுதலாகத் தண்ணீர் திறக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பட்டமந்திரி கிளை:** திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியம் பட்டமந்திரி கட்சிக் கிளையின் 4வது மாநாடு நாகரத்தினம் இல்லத்தில், எஸ்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் என்.ஜீவா மாநாட்டுக் கொடியினை ஏற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், பி.வி.செந்தில் ஆகியோர் அரசியல் விளக்கவுரையாற்றினார். இதில் கிளைச் செயலாளராக எஸ்.ஜெயராமன், துணைச் செயலாளர்களாக எஸ்.விஸ்வநாதன், என்.கோகிலா, பொருளாளராக எம்.நாகரத்தினம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருத்துறைப்பூண்டி நகரம்:** எஸ்.சிவராமன், பி.குமார் நினைவரங்கத்தில், எல்.பக்கிரிசாமி, பி.காந்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை கோ.பழனிச்சாமி எக்ஸ் எம்.எல்.ஏ ஏற்றி, மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். தியாகிகளின் நினைவு ஸ்தூபிக்கு ஆர்.ஞானமோகன் மாலை அணிவித்தார். நகரச் செயலாளர் டி.பி.சுந்தர் அறிக்கையை முன்மொழிந்தார்.

தோழர்கள் க.மாரிமுத்து எம்.எல்.ஏ, வழக்கறிஞர் எம்.வையாபுரி, கே.உலகநாதன் எக்ஸ் எம்.எல்.ஏ, அ.பாஸ்கர், கே.ஆர்.ஜோசப், பி.வி.சந்திரராமன், வி.ஜவகர் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். வை.செல்வராஜ் எம்.பி மாநாட்டை வாழ்த்திப் பேசினார்.

இதில் செயலாளராக பி.வி.சி.கார்த்திக், துணைச் செயலாளராக பி.குமார், பொருளாளராக ஆர்.அமர்சிங் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் பத்திற்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கோவை மத்திய மண்டலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய மண்டலக் குழு மாநாடு, காந்திபுரத்தில் மூத்த தோழர் ஏ.சுப்பிரமணியம், என்.நந்தகுமார், கலை அஸ்வினி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மறைந்த தோழர் ஆர்.தேவராஜ் உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் பொன்னான் ஏற்றிவைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.எம். செல்வராஜ் ஆகியோர் விளக்க உரை ஆற்றினர்.

மாநாட்டில் மண்டலச் செயலாளராக கலை அஸ்வினி, துணைச் செயலாளர்களாக என்.நந்தகுமார், பி.அறிவொளி, பொருளாளராக கே.ரவீந்திரனும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் கோயமுத்தூர் மாநகராட்சி அபரிமிதமான வரிகளை விதித்து வருகிறது. வீட்டு வரி மற்றும் சொத்து வரி, குப்பை வரி, பாதாளச் சாக்கடை வரி உயர்வைத் திரும்பப் பெற வேண்டும்.

மாநகராட்சிச் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கிறது. எனவே, சாலைகளை உடனுக்குடன் சீர்படுத்த வேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

# இந்திய விண்வெளிப் பயணம் விண்வெளி ஆய்வின் உச்சம்



மு.வீரபாண்டியன்

**நாசா இஸ்ரோ இரு நாடுகளின் விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியால் இந்தியா ஏறத்தாழ 41 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளிக்குச் சென்று சாதனை படைத்துள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா இரண்டு வார காலம் தங்கி ஆய்வுகள் நடத்துவார்.**





அமெரிக்காவின் புளோரிடாவில் நாசா கென்னடி விண்வெளி மையத்தில் இருந்துதான் பால்கன் 9, ராக்கெட் புறப்பட்டுள்ளது.

அமெரிக்கா வளர்முக நாடுகள் அனைத்திற்கும் விண்வெளி ஆய்வுகளைப் பகிர்வதில்லை. இந்தியா விண்வெளி ஆய்வில் தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்து வருகிறது. நமது விஞ்ஞானிகளின் அறிவும் ஆற்றலும் சிறப்பான இடத்தை எட்டுகிறது.

நமது நூற்றாண்டில் முதன்முதலில் விண்வெளி ஆய்வைத் துவக்கி வைத்தது சோவியத் யூனியன். ஸ்புட்னிக் விண்கலம் உலகை வலம் வந்தது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஆச்சரியத்தில் மூழ்கியது, உலகம் வியந்தது.

பின்னர் யூரிகாரின் என்னும் விண்வெளி வீரரை விண்வெளிக்குச் சுற்றிவரச் செய்தது. அதன் பின்னர் வாலண்டினா எனும் பெண் விண்கலத்தில் விண்ணைச் சுற்றி வந்தார். மேலும் கடும் முயற்சிகள் மேற்கொண்டு சோவியத் யூனியன் லைசா எனும் நாய்க்குட்டி சாம் குரங்குகள் என அடுத்தடுத்து விண்வெளிப் பயணத்தில் அமெரிக்கா, சோவியத் போட்டியிட்டன. நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் கால்பதித்தார். உலகம் கொண்டாடியது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்காவிற்கு வாழ்த்துகள் சொன்னது. விண்வெளியில் சர்வதேச ஆய்வு மையம் உள்ளது. இதில் ரஷ்யா அமெரிக்கா சீனா பலமுறை ஆய்வுகள் செய்துள்ளன. இந்தியா செல்வது முதல் முறை விண்வெளியில் தங்கி ஆய்வுகள் செய்வது சாதனை என்கிறார்கள் விண்வெளி ஆய்வு அறிஞர்கள்.

1984 ஆம் ஆண்டு விண்வெளியில் ரஷ்யா ஆய்வு மையம் அமைத்தது. இதற்கு இந்திய வீரர் ராகேஷ் சர்மா சென்றார். மல்கோத்ரா ராகேஷ் சர்மா இரண்டு விண்வெளி வீரர்களுக்கு சோவியத் ரஷ்யா பயிற்சி அளித்த பின்னர் ஒருவரைத் தேர்வு செய்து விண்வெளிக்கு அனுப்பியது.

தற்போது அமெரிக்க விண்வெளியில், அமெரிக்கா போலந்து ஹங்கேரி, இந்திய விண்வெளி வீரர்கள் கூட்டாகச் செல்கிறார்கள். அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுவும் தமிழ் மாநிலக் குழுவும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றன.

விண்வெளி ஆய்வில் தற்போது கடும் போட்டி நிலவுகிறது. அந்தப் போட்டி முன்னர் சோவியத் அமெரிக்கா என்றிருந்தது.

தற்போது சீனா அமெரிக்கா என மாறி உள்ளது. தற்போது சீனா பல துறைகளில் அமெரிக்காவை முந்துகிறது. உதாரணத்திற்கு அமெரிக்கக் கடற்படையை அது பின்னுக்குத் தள்ளுகிறது. அதன் நவீன உத்திகள் ஆச்சர்யமளிக்கின்றன.

சீனாவில் ‘ரேர் எலிமண்ஸ்’ அதாவது கிடைப்பதற்கு அரிய கனிமங்கள். இதனைத்தான் ‘Rare Earth Elements’ அரியவகை கனிமம் என்கிறார்கள். உலகில் எவ்வளவு கிடைக்கிறதோ அதில் சரிபாதி சீனாவில் கிடைக்கிறது.

லாந்தியம், சீரியம், பிரமோத்தியம் இவைதான் நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணை ரேடார் அனைத்திற்கும் பயன்படுகின்றன.

இது வேறு நாடுகளில் கிடைத்தாலும் செறிவூட்ட முடியாது. செறிவூட்டினால் கழிவுப் பொருட்கள் மிக மிக ஆபத்தானது. எனவே எந்த ஐரோப்பிய அமெரிக்கா நாடுகளும் செறிவூட்டுவதில்லை. உலகில் மேற்கண்ட பொருட்களைச் செறிவூட்டுவது சீனா மட்டும்தான்.

90 சதம் சீனாதான் செறிவூட்டுகிறது

இந்தியாவில் இந்த அரியவகை கனிமம் 1சதம் கூட இல்லை. சீனாவை இந்தியா நம்பி உள்ளது. சீனா இந்தியா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறது.

இத்தகைய அரிய கனிமங்களுக்காகத்தான் உக்ரைன் நாட்டுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது அமெரிக்கா. எரியும் வீட்டில் கிடைப்பதை அபகரிக்கும் செயல் இது.

சரி விண்வெளி ஆய்வுகளால் என்ன பயன்? எண்ணெய் வளங்கள் மற்றும் அரிய கனிமங்கள் மாறும் பூகோளச் சூழல் எனக் கண்டறியலாம்.

விண்வெளியில் என்ன சாத்தியம்! பயிரிட முடியுமா? வாழ்விடங்கள் சாத்தியமா? நீர் சாத்தியமா கனிமங்கள் என இப்படிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளலாம்.

ஆனால் உண்மையில் விண்வெளியில் நடப்பது விண்வெளி ஆய்வுகளால் நாடுகளை எப்படி உளவு பார்க்கலாம். ராணுவத் தகவல்களை எப்படிப் பரிமாறலாம். ‘ஸ்டார் வார்’ நட்சத்திரப் போர் எப்படி நடந்தால், அதாவது விண்வெளியில் புவி மீது எப்படிக் கொண்டு போடலாம். இந்த ஆய்வுகளில்தான் அமெரிக்கா, ரஷ்யா ஈடுபடுகிறது. சீனா இருவரையும் முந்துகிறது.

இந்தியா என்ன செய்யும்!?

வானில் நீந்தும் நிலவில் நாளை பள்ளிக்கூடம் நடக்கும்!?

காற்றில் ஏறிப் பயணம் செல்ல பாதை அங்கே இருக்கும்.

எங்கும் வாழும் மழலைச் செல்வம் ஒன்றாய்ச் சேர்ந்து படிக்கும் இல்லை சாதி இல்லை மதமும் என்றே பாடிச் சிரிக்கும்

இது தமிழ்த் திரைப்படப் பாடல்

இது சாத்தியப்பட்டால் கூட விண்வெளி ஆய்வு வெற்றிதான்!

# அனைத்து விவசாயிகளுக்கும் ‘பூம்’ அடையாள அட்டை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்குவதுடன், பிரதமர் விவசாயிகள் நலநிதியை கிடைக்கச் செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆதார் கார்டு போல் விவசாயிகளுக்கு பூம் கார்டு அடையாள அட்டை வழங்க ஒன்றிய அரசு பதிவு செய்து வருகிறது. வருவாய்த்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகள் இன்னும் முடிவடையவில்லை. நில உடமை ஆவணங்கள் இருப்பவர்கள் மட்டுமே பதிவு செய்யலாம் என ஒன்றிய அரசு அறிவித்திருப்பதால், எஞ்சிய குத்தகை விவசாயிகள், கிரயப் பத்திரம் பதிவு செய்யாமல் நிலங்களில் சாகுபடி செய்துவரும் விவசாயிகள் போன்றவர்கள் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, ஆவண உரிமை உள்ள நில உரிமையாளர்கள் மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்ற ஒன்றிய அரசின் விதிமுறையால், அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் இணைய முடியவில்லை. இதனால் சாகுபடி விவசாயிகள் பதிவு முழுமை பெறவில்லை.

பூம் கார்டு பெற்றுள்ள விவசாயிகள் மட்டுமே அரசின் திட்டங்கள், சலுகைகளைப் பெற முடியும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதாவது பூம் கார்டு வைத்திருப்பவர்கள் மட்டுமே மானியம், கடன், காப்பீடு, சலுகை போன்றவற்றைப் பெற முடியும். ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால், 70 விழுக்காடு விவசாயிகள் அரசின் எந்த உதவியையும் பெற முடியாமல் நிராதரவாக கைவிடப்படுவர். அவர்கள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, நில உடமை ஆவணம் இன்றி, கிராம வருவாய்த்துறை சான்றின் படியே சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் பூம் கார்டு வழங்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் மானியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அதிகாரிகள் வாய்மொழியாகத் தெரிவித்துள்ளனர். இதற்காற அதிகாரப்பூர்வமான அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும்.

இதேபோன்று, பிரதமர் விவசாயிகள் நலநிதி(PM Kisan Saman Fund) என்ற திட்டத்தில் 1.12.2018 முதல் ஆண்டுக்கு 3 தவணைகளில் ரூ.6000 வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் தொடங்கும் போது தமிழ்நாட்டில் 48 லட்சம் விவசாயிகள் பயனாளிகளாக இருந்தனர். கடந்த ஆண்டு பயனாளிகளின் எண்ணிக்கையை 37 லட்சமாக ஒன்றிய அரசு குறைத்து விட்டது. இவர்களில் ஆதார் எண் பதிவு செய்யவில்லை என்று கூறி 9 லட்சம் விவசாயிகளுக்கு நிதி கொடுக்காமல் நிறுத்திவைத்துள்ளது.

எனவே, கிசான் சமான் நிதியை நிபந்தனை இன்றி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் நிதியை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

# விவசாயிகளிடம் முழுமையாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும்

## நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியூசி வலியுறுத்தல்

ஏஐடியூசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர் சங்கம் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக் குழு கூட்டம், தஞ்சாவூரில் மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு, மாநிலச் செயலாளர் பி.நாகேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் நடைபெற்ற பணிகள் குறித்து உரையாற்றினார். மாநிலப் பொருளாளர் தி.கோவிந்தராஜன் வரவு செலவு குறித்துப் பேசினார். மாநில துணைத் தலைவர்கள் கே.ராஜ்மோகன், எஸ்.சிவானந்தம், மாநிலச் செயலாளர்கள் எம்.எஸ். கிருஷ்ணன், எம்.கலியபெருமாள், கே.ராஜேந்திரன் உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு என்சிசிஎப் என்ற கூட்டுறவு நிறுவனம் மூலம், நெல் கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளித்தது. டெல்டா மாவட்டங்களில் மட்டும் கடும் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டு மற்ற மாவட்டங்களில் கொள்முதல் செய்தது. இந்தக் கொள்முதல் முறை பெரும் தோல்வியைச் சந்தித்ததோடு, விவசாயிகளுக்கு விற்பனை செய்த நெல்லுக்குத் தொகை சென்றடையாததோடு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் உரிய முறையில் கணக்குகளைச் சரியாக ஒப்படைக்காததால் மேற்கண்ட என்சிசிஎப் நெல் கொள்முதல் முறை கைவிடப்பட்டது. இதனால் சென்ற ஆண்டு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்வதற்கான உரிய முன்னேற்பாடுகளும் செய்யாமல், குறிப்பாக நெல் சேமித்து வைப்பதற்கான திறந்தவெளிச் சேமிப்பு நிலையங்கள் கூடத் திறக்க ஏற்பாடு செய்யாமல் அரசுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளானார்கள். வரும் பருவங்களில் விவசாயிகளிடம் முழுமையாகக் கொள்முதல் செய்து அதனை முறையாக இயக்கம் செய்து பாதுகாக்க, முன்னேற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

2014 ஆம் ஆண்டு வரை கொள்முதல் பணியில் சேர்ந்த பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

எடை குறைவைக் காரணம் காட்டிப் பணிமறுப்பதைக் கைவிட்டு, பணி முதிர்ச்சிபடி பணி வழங்க வேண்டும்.

60 வயதைக் கடந்த கொள்முதல் சுமை இறக்கும் தொழிலாளர்களுக்கு, தலைமை அலுவலக அனுமதி பெற்றுப் பணி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மயிலாடுதுறையில் வேளாண் கல்லூரி அமைத்திட வேண்டும்

## மாவட்ட 25வது மாநாடு தீர்மானம்

மயிலாடுதுறை மாவட்ட 25வது மாநாடு கே.எஸ்.சிவராமன், வித்யா தேவி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமையில், மாவட்ட அலுவலகத்திலிருந்து பிரதிநிதிகள் பேரணியாக வந்தனர். மாநாட்டுக் கொடியினை ஆர்.இடும்பையன் ஏற்றினார். நினைவுச் சின்னத்திற்கு ஏஐடியூசி மாவட்டத் தலைவர் ராஜ்மோகன் மாலை அணிவித்தார். எம்.செல்வராஜ் எம்.பி படத்திற்கு மூத்த தோழர் ஒய்.எஸ்.சர்புதின் மாலை அணிவித்தார். வே.நீதிசோழன் வரவேற்புரை ஆற்றினார். ராமன் உறுதிமொழி வாசிக்க மாநாடு துவங்கப்பட்டது.

மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுச் செயலாளர் ஜி.பழனிசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள். இதில் மாவட்டச் செயலாளராக அ.சீனிவாசன், துணைச் செயலாளராக எஸ்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப் பொருளாளராக கே.எஸ்.சிவராமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கடைமடை மாவட்டமான மயிலாடுதுறை தொடர்ந்து இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2025 ஜனவரியில் முதல் பருவம் தவறி பெய்து வரும் மழையால், அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த நெல் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, மகசூல் இழப்பு ஏற்பட்டது. ஒன்றிய, மாநில அரசுகளின் குழுக்களும், மாநில அமைச்சர்களும் பார்வையிட்டுச் சென்றனர். ஆனால் இதுவரை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவில்லை. எனவே, இழப்பீட்டுத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு 30,000 வழங்கிட வேண்டும்.

பெண் விடுதலைப் போராளியும், சமூகச் சீர்திருத்த சிந்தனையாளருமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு, அவரது சொந்த ஊரான மூவலூரில் நினைவு மண்டபம் அமைத்திட வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டத்திலேயே அனைத்துத் துறை அலுவலகங்களும் இயங்க உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மயிலாடுதுறை நகரத்திற்கு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். மயிலாடுதுறை மாப்படுகை, சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன் கோயில் ரயில் பாதைகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

மயிலாடுதுறையில் வேளாண் கல்லூரி அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.








## திண்டுக்கல் மாவட்ட மாநாடு

திண்டுக்கல் மாவட்ட 13வது மாநாடு 27.6.2025 அன்று, காமராஜர் சிலையிலிருந்து பேரணியுடன் துவங்கியது. இம்மாநாட்டிற்கு மாநகரச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் வினோத்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி சிறப்புரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எம்.மணி, கௌசல்யா ஆகியோர் உரையாற்றினார். மாநகரக் குழு உறுப்பினர் சாந்தி நன்றி கூறினார். பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். பொது மாநாட்டில் களம் பட்டறையின் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. ஆயக்குடி கோடாங்கி பட்டி ஆகியோரின் பறையாட்டம் பேரணியைச் சிறப்படையச் செய்தது.



கட்சியின் திண்டுக்கல் 13வது மாவட்ட மாநாட்டைத் தேசியக் குழு உறுப்பினர் க.சந்தானம் துவக்க உரையாற்றினார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிறைவுறையாற்றினார். இம்மாநாட்டில் 25 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் மாவட்டச் செயலாளராக ஏ.பி.மணிகண்டன் தேர்வு செய்யப்பட்டார்.



# ஈரோடு சத்தியமங்கலம் மேட்டூர் இரயில் பாதைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்

## ஈரோடு வடக்கு மாவட்ட மாநாடு தீர்மானம்!

கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட மாநாடு 29.06.2025 அன்று சத்தியமங்கலத்தில், பி.எல்.சுந்தரம் எக்ஸ் எம்.எல்.ஏ, பவானி சந்திரசேகர், சத்தியமங்கலம் லட்சுமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. பி.எல்.சுந்தரம் மாநாட்டுக் கொடியினை ஏற்றிவைத்தார். மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன் தியாகிகள் நினைவுத் தூணைத் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மாவட்ட துணைச் செயலாளர் சக்திவேல் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநாட்டு வரவேற்புக் குழுச் செயலாளர் சுரேந்தர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பழங்குடி மக்கள் சங்கத்தலைவர் வி.பி.குணசேகரன் மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசினார். மாவட்டச் செயலாளர் மோகன்குமார் வேலை அறிக்கையினை முன்வைத்துப் பேசினார்.

இதில் மாவட்டச் செயலாளராக எஸ்.மோகன்குமார், துணைச் செயலாளர்களாக கே.சக்திவேல், பவானி வழக்கறிஞர் ப.மா.பாலமுருகன், பொருளாளராக ஜி.வெங்கடாசலம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தணிக்கைக் குழு அறிக்கையினை தா.சந்திரன் முன்வைத்தார். பவானிசாகர் வேலுமணி, சத்தி ஜமேஷ், தலமலை ரகு ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர். மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ மாநாட்டை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் இரா. ஸ்டாலின் சிவக்குமார் நன்றி தெரிவித்துப் பேசினார்.



பவானிசாகர், கோபி, பவானி, அந்தியூர் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட ஈரோடு மாவட்டத்தின் வடக்குப் பகுதி பின்தங்கிய, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட, மலைகள் நிறைந்த பகுதியாகும்.

இப்பகுதியில் விளையும் மஞ்சள், பருத்தி, வாழை, மலர்கள் போன்ற வேளாண் உற்பத்திப் பொருட்களை ஈரோடு, மைசூரு, பெங்களூரு, சென்னை போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்லவும், மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான ஈரோடுசத்தியமங்கலம் சாம்ராஜ் நகர் இரயில்பாதைத் திட்டம், சுற்றுச்சூழல் பிரச்சனை காரணமாகக் கைவிடப்பட்டுவிட்டது.

அண்டை மாநிலங்களுக்கிடையேயான சாலைப் போக்குவரத்தும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் காரணமாகத் தடைபட்டு வருகிறது.

சத்தியமங்கலம்ஈரோடு இடையே இரயில் பாதை அமைக்க இரயில்வே துறையால் ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க நிலை அளவைப் பணிகளும் முடிக்கப்பட்டு, 24.01.200 அன்றே ஆய்வறிக்கையும் அளிக்கப்பட்டும் விட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்படும் போது ஈரோடு சத்தியமங்கலம் இடையே 8 இடங்களில் இரயில் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

சத்தியமங்கலம் அந்தியூர் மேட்டூர் இரயில் பாதைத் தொடக்க நில அளவீட்டுப் பணிகளும் முடிக்கப்பட்டு, அதன் அறிக்கை 26.09.2006 ல் இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது, ஈரோடு மாவட்டத்தின் வடக்குப் பகுதியின் சமூகப் பொருளாதார நிலை உயர்ந்திடும். எனவே, ஒன்றிய மாநில அரசுகள் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

இரயில்வே துறையால் ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டு. தொடக்க நில அளவைப் பணிகளும் முடிக்கப்பட்டு, 24.01.20 அன்றே ஆய்வறிக்கையும் அளிக்கப்பட்ட சத்தியமங்கலம் கோபி ஈரோடு அகல இரயில் பாதை நிறைவேற்ற வேண்டும்.

தாளவாடி, கடம்பூர், பர்கூர் ஆகிய இம்மலைப் பகுதிகளில் பழங்குடியினர் மற்றும் பட்டியலினத்தவர் அதிகம் வாழ்கின்றனர். மலைகளுக்கு மறுபுறம் உள்ள சமவெளிப்பகுதியில் மானவாரி விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்குள்ள விவசாயிகளுக்குப் பெரும்பாலும் பட்டா இல்லை, அரசு புறம்போக்கு நிலங்களாகவே உள்ளன. இதனால் அரசின் எந்த உதவியையும் பெற முடிவதில்லை, அதேபோல் மலைப்பகுதிகளில் சொந்த வீடற்றவர்கள் ஏராளம் உள்ளனர்.

இவர்களால் சொந்தமாக வீட்டு மனையிடத்தை விலைக்கு வாங்கி, வீடு கட்டுவது எக்காலத்திலும் சாத்தியமே இல்லை. சமவெளிப்பகுதியில் உள்ள ஏழைகளுக்கு விலையில்லாமல் வீட்டுமனையிடம் வழங்கும் அரசு, மலைப்பகுதி மக்களுக்கும் வீட்டுமனையும், பட்டாவும் வழங்க வேண்டும்.

1989 ஆம் ஆண்டில் மலைப்பகுதி விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்க விதிக்கப்பட்டுள்ள தடையிலிருந்து, ஈரோடு மாவட்டத்திற்கு விலக்களித்து, மலைப்பகுதி மக்கள் பயிரிட்டு வரும் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்கவும், வீடற்றவறியவர்களுக்கு விலையில்லாமல் வீட்டுமனைப் பட்டா வழங்கவும் அரசு முன்வரவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.

16 ஜூலை 06 ஜூலை 12 2025 ஜனசக்தி

JANASAKTHI TAMIL WEEKLY CELL: 9444331138
DAY OF PUBLICATION: EVERY THURSDAY

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# அமைதியைச் சீர்குலைக்கும் மதவெறியர்களை வேரறுப்போம்! திண்டுக்கல்லில் இடதுசாரிக் கட்சிகள் மாபெரும் பொதுக்கூட்டம்




கார்ப்பரேட் ஆதரவு மதவாத ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டித்தும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரத்தில் புகுந்து தாக்குதல் நடத்திய இந்து முன்னணி மற்றும் பாஜக கும்பலைக் கண்டித்தும் திண்டுக்கல்லில் இடதுசாரிக் கட்சிகள் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மணிக்கூண்டு அருகே நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.சச்சிதானந்தம் தலைமை வகித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் கே.பிரபாகரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (எம்எல்லிபரேசன்) யின் மாவட்டச் செயலாளர் பி.சுப்புராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (எம்எல்லிபரேசன்) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

தமிழகத்தில் மக்கள் ஒற்றுமையைக் குலைக்கவும், வன்முறைக் கலவரங்களை ஏற்படுத்தவும், இந்து முன்னணி பாஜக கூட்டம் பல்வேறு சதித் திட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில், அவை ஒருநாளும் எடுபடாது, என்றும் நல்லிணக்கப் பாரம்பரியம் கொண்ட தமிழக மக்களைத் அணிதிரட்டி சங் பரிவார் கூட்டத்தை இடதுசாரிகள் முறியடிப்பார்கள் என்றும் தலைவர்கள் தங்களின் உரையில் குறிப்பிட்டனர்.

சிபிஎம் மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் மதுக்கூர் ராமலிங்கம், என்.பாண்டி, சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் க.சந்தானம், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி. சிபிஐ (எம்எல்லிபரேசன்) மாநிலக் குழு உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். சிபிஎம் மாநிலக் குழு உறுப்பினர் ஜி.ராணி நன்றி கூறினார்.

## அரசியல் துணிச்சல் இல்லாத மதவெறியர்கள் வன்முறைத் தாக்குதல் தொடுக்கிறார்கள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆற்றிய உரையின் பகுதிகள்:

அரசியலை அரசியலாக எதிர்க்க துணிச்சல் இல்லாததால் மதவெறியர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள். தாடிக்கொம்பில் சிபிஎம் ஒன்றி யச் செயலாளர் சரத்குமார் மீது இந்து முன்னணி நடத்திய தாக்குதல் இதற்கு உதாரணம். இந்தக் கூட்டம் முடிந்து நாம் கலைந்து சென்று விட்டால், இதைப் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தா மல் போனால், தமிழகம் முழுவதும் இப்படிச் செய்யலாம் என்ற துணிச்சல் அவர்களுக்கு வரும்.

அமித் ஷா முருகன் மாநாட்டிற்கு "பல்லா யிரக்கணக்கில் திரண்டு வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று சொன்னவர், இப்போது "எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை" என்கிறார். அவர் எவ்வளவு பெரிய பித்தலாட்டக் காரர் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. ஆனால் அது அரசியல் மாநாடுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்நாட்டு ஆளுநரே முதல் நாளே சென்று தீபாராதனை காண்பித்து "இதற்கும் அரசியலுக்கும் சம்பந்த மில்லை, இது முருக பக்தர்கள் மாநாடு" என்று அப்பட்டமாக பொய் சொன்னார்.

சிபிஎம் தோழர் சரத்குமார் மீது இந்து முன் னணி தாக்குதல் நடத்தியது சின்ன விஷயம் அல்ல. இது போன்ற சம்பவம் ஏன் நடைபெறு கிறது என்பதுதான் முக்கியம். மோடி ஆட்சிக்கு வந்த பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கட்டுப்பாட்டுக் குழுவில் இருந்த தோழர் கோவிந்த் பன்சாரே சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் செய்த "பாவம்" என்ன தெரியுமா? மராட்டிய மன்னர் சிவாஜி பற்றி ஒரு புத்தகம் எழுதினார். சிவாஜி இந்து மன்னர் என்று ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரம் செய்து வந்தது. அதை மறுத்து "சிவாஜி மதச்சார்புடையவர் அல்ல, மதச்சார்பற்றவர்" என்று ஆதாரப்பூர்வமாக புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகம் லட்சக் கணக்கில் விற்பனையானது. மக்கள் விழிப் புணர்வு அடைந்துவிடுவார்கள் என்று எண்ணி அஞ்சி, கொலை செய்யப்பட்டார்.

அதேபோல் நரேந்திர தபோல்கர் கொலை செய்யப்பட்டார். கல்புர்கி கொலை செய்யப்பட்டார். பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலைகள் அனைத்தும் ஒரே மாதிரி நடந்தது. இந்தப் படுகொலையைச் செய்த குண்டர்கள், தாடிக்கொம்பில் சரத்குமாரைத் தாக்கிய குண்டர்களின் சகோதரர்கள். இவர்கள் செய்வது சரிதானா என்பதுதான் நாங்கள் மக்கள் முன் வைக்கிற கேள்வி.

# திருப்பூர் மாவட்டத்தில் அரசு பொறியியல் மற்றும் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும்

## திருப்பூர் புறநகர் மாவட்ட 2வது மாநாடு தீர்மானம்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் புறநகர் மாவட்ட 2வது மாநாடு 2025 ஜுன் 22, 23 ஆகிய இரண்டு தேதிகளில், ஐ.ஏ.அஜீஸ், எஸ்.கந்தசாமி, சி.ஆறுமுகம் ஆகியோர் நினைவரங்கில், வி.பி.பழனிசாமி, பி.நதியா, ஆர்.ஷாஜகான் ஆகியோர் வழி நடத்தினார்கள்.

முதல் நிகழ்வாக அவிநாசிலிங்கம் பாளையத்தில் இருந்து மூத்த தோழர்கள் ஆர்.ரங்கசாமி, ஆர்.குட்டியப்பன் ஆகியோரால் நினைவு ஜோதி எடுத்துவரப்பட்டு, ஜோதியைக் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வஹிதா நிஜாம் பெற்றுக் கொண்டார்.

மாநாட்டுக் கொடியைக் கட்சியின் மூத்த தோழர். எஸ்.ஸ்தனிஸ்லாஸ் ஏற்றினார். பின்னர் தியாகிகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலித் தீர்மானத்தை பி.நதியா முன்மொழிந்தார். மாநாட்டைத் துவக்கி வைத்துக் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. பேசினார். வேலை அறிக்கையைக் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக் முன்வைத்தார். அமைப்பு நிலை அறிக்கையைக் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எம்.மோகன் முன்வைத்தார்.

மாலையில் அவிநாசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பேரணி புறப்பட்டு, வ.உ.சி திடலில் அவிநாசி ஒன்றியச் செயலாளர் இரா.முத்துசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வரவேற்புக் குழு தலைவர் ஆர்.ஷாஜஹான் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்கூட்டத்தில் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்பி, தேசியக் குழு உறுப்பினர் வஹிதா நிஜாம், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக் ஆகியோர் உரையாற்றினார்கள். வரவேற்புக் குழு பொருளாளர் என். செல்வராஜ் நன்றி கூறினார். பேரணியில் சுமார் 1500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொகுப்புரைக்குப் பிறகு அறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் வரவு செலவு சம்பந்தமான விவரங்கள் தணிக்கைக் குழு கன்வீனர் வி.சௌந்தரராஜன் அவர்களால் முன்வைக்கப்பட்டு ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளராக கே.எம்.இசாக், மாவட்டத் துணைச் செயலாளர்களாக எம்.மோகன், பி.நதியா, பொருளாளராக வி.பி.பழனிசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வஹிதா நிஜாம் அரசியல் உரை நிகழ்த்தினார். மாநாட்டை நிறைவு செய்து கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி பேசினார். வரவேற்புக் குழு தலைவர் ஆர்.ஷாஜஹான் நன்றி கூறினார்.

திருப்பூர் புறநகர் முழுவதும் குடியிருக்கச் சொந்த வீடில்லாமல் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க வேண்டும். வீடு கட்டிக்கொள்ள 6 லட்சம் ரூபாய் நிதி வழங்கக் கோரியும் வலியுறுத்தி ஜுலை 20 முதல் 27 வரை வீடுகள்தோறும் மக்கள் சந்திப்புப் பிரச்சார இயக்கம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டியும், ஆனைமலை, நல்லாறு திட்டத்தைச் செயல்படுத்தக் கோரியும், அவிநாசி ஒன்றியத்திற்கு உட்பட்ட பழங்கரை ஊராட்சியை அவிநாசி நகராட்சியுடன் இணைத்துத் தரம் உயர்த்தக் கோருவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.